# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


8 MAR 1965



மாவடிச் சோமாஸ்கந்தர்,
திருவேகம்பம், காஞ்சிபுரம்.

மாலை 7] குரோதி மாசி—மார்ச் 1965 [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



வள்ளி தெய்வயானை சமேத திரு முருகப் பெருமான்
( திருமங்கலம் )

## பொருள் அடக்கம்


1. திருவாய் மொழி
2. திருச்சந்த விருத்தம்
3. திருப்புகழ் அமிழ்தம்
4. ' திருநெறிய தமிழ் '
5. பெரியவர்கள் ...... கவிதை
6. ' வைத்தியநாதன் '
7. ' திருவளர் தாமரை '
8. உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்
9. அச்சிறுபாக்கம் கல்வெட்டுக்கள்
10. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
11. ' தேடினும் இல்லை '
12. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **" திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34 "** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

MAR 1965


# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி:மாசி–மார்ச் 1965 [மணி 6


## திருவாய்மொழி

**முன்னுரை :**

ஆழ்வார்கள் அனைவருமே சிறப்புடையவர்களாயினும், அவர்களுள்ளும் மிகவும் சிறப்புடையவராகப் பெரிதும் போற்றப் பெறுபவர் **நம்மாழ்வார்.** நம்மாழ்வாருடைய காலத்திலேயே, அவருடைய மாணவராக இருந்த **மதுர கவிகள்** என்பவர், நம்மாழ்வாரையும் அவருடைய நூல்களையும் சிறப்பித்துக் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பத்துப் பாசுரங்கள் அடங்கிய ஒரு நூலை அருளிச் செய்தார். வைணவப் பெருமக்கள் **பிரபந்நஜன கூடஸ்தர்** என நம்மாழ்வாரைப் பெரிதும் போற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவர். 'பிரபத்தி நெறியைப் பின்பற்றும் வைஷ்ணவப் பெருமக்கள் எல்லோருக்கும் தலைவர்' என்பது அதன்பொருள். ''நம்பெருமாள்-**நம்மாழ்வார்**-நம் ஜீயர்-நம்பிள்ளை என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்'' எனவரும் உபதேச ரத்தின மாலைச் செய்யுளும் நம்மாழ்வாரின் மாட்சிமையினை நன்குணர்த்தும்.

**நம்மாழ்வார் :**

பாண்டிய நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணி நதிக் கரையில், ஆழ்வார் திருநகரி என வழங்கும் திருக்குருகூர் என்னும் தலத்தில், வேளாளர் குலத்தில், **காரியார்** என்ற ஒரு வைணவப் பெருஞ் செல்வருக்கும், திருவண் பரிசாரம் என்னும் ஊரில் வாழ்ந்த திருவாழ்மார்பர் என்பவரின் மகளாகிய **உடையநங்கையார்** என்னும் அம்மையாருக்கும், திருக்குறுங்குடி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள 'பொலிந்து நின்றபிரான்' திருவருளால் மைந்தராக **நம்மாழ்வார்** திருவவதாரம் செய்தருளினர்.

**பிரபந்தங்கள் :**

பெற்றோர்கள் இவருக்கு **மாறன்** எனப் பெயர் இட்டுத் திருக்குறுங்குடிப் பெருமான் முன்னிலையில், எடுத்துக் கொண்டு சென்று, விட்டனர். குழந்தை

குறிப்பு : அன்பியற் பெருந்தகையாகிய நமது அறநிலைய ஆணையர் அவர்கள், விரும்பிக் குறிப்பிட்டுப் பணித்தபடி, இத்தகைய உரை விளக்கங்கள் இனி நம் 'திருக்கோயில்' இதழில் தொடர்ந்து வெளிவரும்.— ஆசிரியர்.

யாகிய நம்மாழ்வார் அங்கே இருந்த ஒரு புளியமரத்தடியிற் சென்று அமர்ந்தார். 16 ஆண்டுகள் வரையிற் கண் விழித்துப் பார்த்தல், பேசுதல் முதலியன ஒன்றுமின்றி, இறைவனையே தியானித்துக்கொண்டு இருந்தார். **சடகோபன்** என்னும் மற்றொரு சிறப்புப் பெயர் அமையும்படி, இங்ஙனம் உலகிய லுணர்வு சிறிதுமின்றி இறையுணர்வி லேயே முழுவதும் தலைப்பட்டு அழுந்தி நின்று, அதிலேயே பெரிதும் ஈடுபட்டு நின்றதனால், எல்லையற்ற பெருமகிழ்ச்சியும் பேரானந்தமும் அவர்க்கு மேலிட்டு ஓங்கின. அதனால் அவர் அழகிய இனிய அருளியற் கவிதைகளைப் பாடலாயினர். அவ்வருளியற் கவிதைகளே **திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி** என்னும் நான்கு ப்ரபந்தங்களாக வழங்கி வருகின்றன.

**பொருளியல்புகள்:**

இந்நான்கு பிரபந்தங்களுள்ளே **திருவிருத்தத்தில்,** நம்மாழ்வார் எம்பெருமானை அநுபவிப்பதற்குத் தடையாக உள்ள உலகியல் தொடர்பினை அறுத்தொழித் தாள வேண்டுகின்றார்; **திருவாசிரியத்தில்,** எம்பெருமான் தன் வடிவழகினைக் காட்டியருள, அதனை முழுவதாக அநுபவித்து இன்புறுகின்றார்: **திருவந்தாதியில்,** எம்பெருமானை அநுபவித்தலால் அதற்குத் தக்க வேட்கை பிறந்து, அவ்வேட்கைக்குத் தக்கபடி அதனைப் புகழ்ந்தும் நினைந்தும் மகிழ்கின்றார்; **திருவாய்மொழியில்,** எம்பெருமான் தானே தன் அனந்த கல்யாண குண கண வைபவங்களுடனும், தன்னை நிர்ஹேதுக கிருபையினால் காட்டியருளக் கண்டு அநுபவித்து, தம்முடைய உலக வாழ்க்கைத் தொடர்பு ஆகிய தடை நீங்கி, எம்பெருமானைப் பெற்றுத் தலைக்கூடி இன்புற்று இயைந்து முடிக்கின்றார்.

**வேறொருவகை விளக்கம்:**

இனிய இப்பிரபந்தங்களின் நிலையினை, வேறொரு வகையாகவும் உரையாசிரியர்கள் விளக்கியருளி யிருக்கின்றனர்.

(1) இராமபிரானுக்கு அடிமைத் தொண்டு செய்ய விரும்பும் பரதாழ்வான் கைகேயி தன்னை 'ராஜந்' என்று கூப்பிட்ட சொற்கேட்டுப் பட்டபாடு போல இருக்கின்றது **திருவிருத்தம்.**

(2) இராமபிரான் சித்திரகூடமலையிலே எழுந்தருளி யிருக்கின்றார் எனக் கேள்விபுற்ற பரதன், 'என் ஒருவனுடைய கண்ணீரையே கண்டு பொறுக்க மாட்டாதவர், இத்தனை பேரும் படும் அளவிறந்த ஆற்றாமையைக் கண்டால், அயோத்திக்கு மீளாது ஒழிவரோ?' என்று எண்ணமிட்டுக்கொண்டு, அவரைக் கானகத்தினின்று அழைத்துக் கொண்டு வரச் செல்லுகின்ற காலத்துத் தாத்திருந்த நிலையைப் போல உள்ளது **திருவாசிரியம்.**

(3) இராமபிரான் கானகம் சென்றாலும், விரைவில் திரும்பி வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன், நந்திக்கிராமத்தில் தங்கி இருந்து இராமனின் வரவினையே எதிர்நோக்கி நின்று, பரதன் தன் பேராவலையும் பேரன்பினையும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தாற்போல அமைந்தது **பெரிய திருவந்தாதி.**

(4) இராமபிரான் மீண்டு போந்து முடி சூடிக்கொள்ள, அதுபோது தன் இயல்புக்குத் தகுதியான பேறுதினைப் பெற்றுப் பரதாழ்வான் மகிழ்ந்து இன்புற்றிருந்தாற் போலத் **திருவாய்மொழி** சிறந்தினிது திகழ்கின்றது.

**திருவாய்மொழி:**

நம்மாழ்வார் அருளிச்செய்த இத்திருவாய்மொழியானது, அடியார்களுக்கு அமிர்தமாய்த் திகழ்வது. எல்லோரையும் இன்புறச் செய்வது. எல்லா உறுதிப் பொருள்களையும் கொடுக்க வல்லது. ஆயிரக்கணக்கான கிளைகளையுடைய உபநிடதங்களின் தொகுதிகளாக இருப்பது; தமிழ்வேதம் என்னும் பெருமை சான்றது. கடல் போன்று விரிந்து பரந்து, சிறந்த பொருள் நலங்களை யுடையது.

(1) ஸ்ரீமந் நாராயணனே அறப் பெரிய முதல்வன். (2) ஆத்மாவிற்குச்

சொரூபம் அடியேன் என்பதே. (3) சரணு கதியே இறைவனைப் பெறுவதற்குரிய வழி, (4) பொய்ந் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும், அழுக்குடம்பும் ஆகிய இவையே, விரோதிகள். (5) ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதுவே பரம புருஷார்த்தம் என்னும் இவ்வைந்து பொருள்களுமே, திருவாய்மொழியிற் சிறப்புற எடுத்துச் சொல்லப்படுகின்றன.

**மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்**
**தக்க நெறியும், தடையாகித்—தொக்கியலும்**
**ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும்**
**குருகையர்கோன்**
**யாழின் இசை வேதத்து இயல்.**

## திருவாய்மொழிச் சிறப்பு:

திருவாய்மொழி, உறுதிப் பொருள்களைத் தெளிவுறக் கூறுகின்ற பிரபந்தங்களில் முதன்மை பெற்றது; பகவானுடைய குணங்களை அனுபவித்தலால் உண்டான பெருமகிழ்ச்சியின் விளைவாக வெளியிடப்பெற்றது; திருவருளால் விளைந்த ஞானத்தின் பயனாகத் தோன்றியது; வேதப் பொருள்களை அறிந்த பெரியோர் அனைவரும் அங்கீகரித்தது; திருமகள் கேள்வனே இப்பிரபந்தங்களுக்குத் தலைவன்; எம்பெருமானின் திருவடிகளுக்குத் தொண்டு செய்ய விழைந்திருப்போர் எவரும் கற்கத் தகுவது இது; முமுட்சுக்களும் முத்தரும் நித்தியரும் எம்பெருமானும் இவற்றின் சுவையை அநுபவிக்கின்றவர்கள்; பகவானுக்குச் செய்யப்படும் கைங்கரியம் ஆகிய நிரதிசய புருஷார்த்தம் இத்தகையதாக இருக்கும் என்பதனைத் திருவாய்மொழியினால் யாவரும் தெளிய உணரலாம்.

மேலும், திருவாய்மொழி யானது வேதப் பொருள்களை யெல்லாம் தமிழ் மொழியினால் எளிது இனிது அருளிச் செய்வது; தெளியாத மறைநிலங்களை யெல்லாம் தெளிய விளக்கி நலஞ் செய்வது; எம்பெருமான் தானே பல பிறவிகள் எதிர்சூழல்புக்குத் தொடர்ந்து பற்றுதற்குரிய நற்பேறு மிக்கவரும், எப்பொழுதும் பகவானின் திருவருளுக்குக் கொள்கலமாக விளங்குபவரும், தத்துவ ஹிதங்களில் வல்லவராய், அவற்றினுடைய உபதேசத்தில் மூண்டவருமாய்த் திகழ்ந்த நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தது; பெரியோர்கள் மிக்குள்ள நாடுகள் எங்கும் வழங்குவது; பிறதேசங்களிலே பிறந்து சிறப்பு வாய்ந்தவராக உள்ள பெரியோரும் இவற்றின் வேறொன்றற்கில்லாத சிறப்பைக் கேட்டு, 'இதனைக் கற்கைக்குத் தகுதியாக இம்மொழி வழங்கும் நாட்டிலே பிறக்கும் பேறு பெற்றிலோமே!' என வியந்து புகழ்வது; எம்பெருமானின் பெருமைகளைக் கூறி, அவரை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போன்று நாம் அறிந்து கொள்ளும்படி செய்வது; பக்தியைத் தோற்றுவிப்பதுடன், தோன்றிய பக்தியினை மேன்மேலும் வளர்த்துப் பெருகுவிப்பது; கற்றல் கேட்டல் செய்யும் பொழுதே எல்லையற்ற பெருவிருப்பையுண்டாக்குவது. இவ்வாற்றால் திருவாய்மொழியின் அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

இத்தகைய திருவாய்மொழியின் பாசுரங்களின் பொருள் நலங்களை, இயன்ற அளவு ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து அனுபவித்து மகிழ முற்படுவோமாக!

---

**உயர்வற உயர்நலம்**
**உடையவன் யவன் அவன்**

**மயர்வற மதிநலம்**
**அருளினன் யவன் அவன்**

**அயர்வறும் அமரர்கள்**
**அதிபதி யவன் அவன்**

**துயர்அறு சுடர்அடி**
**தொழுதெழென் மனனே**

**(பொழிப்புரை) என்னுடைய மனமே! தன்னைக் காட்டிலும் உயர்ந்ததொன்று இல்லையாம்படி மிகவும் உயர்ந்து கொண்டே செல்கின்ற நற்பண்புகளை யுடையவன் யாவனோ, அவன் என்னிடத்தில் உள்ள அறிவின்மைகள் யாவும் நீங்க, ஞானத்தையும் பக்தியையும் எனக்குக் கொடுத்தருளினன். அங்ஙனம் கொடுத்தருளியவன்**

யாவனோ, அவன் மறதி என்பது சிறிதும் இல்லாத நித்திய சூரிகளுக்குத் தலைவன். அத்தகைய தலைவன் யாவனோ அவனுடைய, துன்பங்களை யெல்லாம் நீக்குகின்ற, ஒளிபொருந்திய திருவடிகளை வணங்கிப் பிறவிப் பெருங்கடலினின்று மேலே எழுந்து உய்வாயாக!

[யவன் என்பது யாவன் என்ற சொல்லின் விகாரம். மயர்வு - அறியாமை. அயர்வு - மறதி, அதிபதி - சிறந்த தலைவன், மனன் - மனம், மகரத்திற்கு னகரம் போலியாக வந்தது. 'தொழுதெழென் மனனே' என்பது, தொழுது+ எழு+என்+மனனே எனப் பிரிந்து பொருள் படும்.]

**(1) உயர்வு அற உயர்நலம்:** தன்னினும் உயர்ந்தது ஒன்றுமில்லை என்னும் படி உயர்ந்து கொண்டே செல்லும் நற்பண்புகள்; உயர்ந்தவை என்று மதிக்கப் பெற்றிருக்கும் மற்றைப் பொருள்களின் உயர்வு, சூரியனின் முன்னே மின்மினி போலவும், மகாமேரு மலையின்முன் ஒரு சிறிய கடுகு போலவும் தன்முன்னை உண்மையன்று என்னும்படியும், தன்னுடைய தொன்றே உயர்ந்ததாய் நிலை பேறுடையதாகும்படியும் உயர்ந்துள்ள நற்பண்புகள்; ஏனையோ ரெல்லாம் வருந்தி முயன்று அடைய வேண்டியுள்ள உயர்வுபோல அன்றி, இயல்பாகவே தன் கண் அமைந்துள்ள மிக உயர்ந்த பண்பு நலங்கள்.

['உயர்வு அற' என்ற தொடருக்கு 'வருத்தம் இல்லாமல்' அஃதாவது 'இயல்பாகவே' எனவும் பொருள் கொள்வர். 'உயர்வு' என்னும் சொல்லுக்கு 'வருத்தம்' என்பது நேர்பொருள் அன்று. எனினும் 'உயர்வு' என்பது வருத்தப்பட்டு அடைய வேண்டுவதொன்றாகலின், 'உயர்வு' என்னும் சொல்லுக்கு 'வருத்தம்' என்றும் ஒரு வகையிற் பொருள் கொள்ளலாம். இங்கு வருந்துதல் ஆகிய காரணம், உயர்வு எனக் காரியமாகக் கூறப்பட்டது. இதனை உபசாரவழக்கு என இலக்கண நூலார் கூறுவர். Heaven என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு, That which is to be attained by much heaving' என ஆங்கிலமொழி யறிஞர்கள் கூறும் சிறந்த விளக்கம், ஈண்டு நாம் அறிந்து இன்புறற்பாலது. இனி ஒரு சிலர் உயவு என்னும் சொல்லே, எதுகைத் தொடை குறித்து உயர்வு என வந்தது என்றும் கூறுவது உண்டு.]

(2) அடிமைப்படுதல் இருவகைப் படும். ஒன்று ஒருவரின் குண நலங்களுக்குத் தோற்று அடிமைப்படுதல். மற்றொன்று இயல்பாகவே என்றும் அடிமைப் பட்டிருத்தல். முன்னையதினும் பின்னையதே சிறப்புடையது. ஆழ்வார் இறைவன்பால் இயல்பாகவே அடிமைப் பட்டிருப்பவராயினும், தம்மை இறைவன் தன் திருக்குணங்களினாலேயே பெரிதும் கவர்ந்து ஆட்கொண்டருளினன் ஆதலால், அக்குணங்களின் சிறப்பினையே இங்கு முதற்கண் வியந்து பேசுகின்றார்.

(3) "எம்பெருமானுக்குக் குணமில்லை விபூதியில்லை என்று கூறுகின்ற சிற்றறிவினர்களின் கழுத்தைப் பிடிப்பது போல, ஆழ்வார் தம்முடைய திருவாய்மொழியின் தொடக்கத்திலேயே 'உயர்வற **உயர்நலம்** உடையவன்' என்று அருளிச் செய்திருக்கும் அழகு என்னே! என்னே!" என்று **கூரத்தாழ்வார்** இவ்வடியினைப் பலகாற் கூறி வியந்து மகிழ்ந்து உருகிப் போவராம்!

(4) 'உயர்வற உயர் **குணம்**' என்னாமல் '**நலம்**' என்றது, இறைவனின் திருக்குணங்கள் எல்லாமே பெருநுகர்ச்சி பயப்பது; நன்மையே உருவெடுத்து நிற்பது என்பது உணர்த்தும்.

(5) **மயர்வு:** அஞ்ஞானம், அறியாமை. அடியோடே சிறிதும் அறிவில்லாமை, ஒன்றை வேறொன்றாக அறிதல், இதுவோ அதுவோ என்று மயங்கி அறிதல், அறிந்ததனை மறந்தொழிதல் என்பன பலவும் அஞ்ஞானம் எனப்படும்.

இனி உடலையே உயிராக நினைத்தல் (ஞானாநுதயம்), பிற தெய்வங்களுக்குத் தன்னை அடிமையாக நினைத்தல் (அந்யதாஞானம்), தனக்குத் தானே யுரியவனாகவும், ஆத்மாவோடு அநுபவிக்கின்ற இன்பமே இன்பமாகவும் கொள்ளுதல் (விபரீதஞானம்) என்பனவும், அஞ்ஞானம் எனப்படும்.

(6) **மதிநலம்:** மதியும் நலமும் என உம்மைத் தொகை. மதி - ஞானம்.

நலம் - பக்தி. இனி இதனை 'நலம் மதி' எனக் கொண்டு, நல்ல ஞானம் எனவும் பொருள் கொள்ளுவர். அஃதாவது துளசிச்செடி முளைக்கும்போதே நறுமணத்துடன் முளைக்குமாறு போலவும், கருங்காலி முதலிய மரங்கள் முளைக்கும் போதே வயிரம் பற்றி முளைக்குமாறு போலவும், பக்தியின் உருவத்தை அடைந்த ஞானம்! இவ்வாறு கூரத்தாழ்வான் திருக்குமாரர் ஆகிய **பட்டர்** அருளிச் செய்வர்.

(7) **அருளினன்:** ஒரு காரணமும் இன்றி; என்னுடைய தகுதியின்மை நோக்கித் தவிராமல்; இத்தலையில் நினைவு இல்லாமல் இருக்கவும், தானே தன் தலையளியால் எளிவந்து அருளினன்.

(8) இறைவன் திருவருள் புரிவதற்கு முன்னர் ஆழ்வார் தம்மை இல்லாத பொருளுக்குச் சமமாகவே கருதியிருந்தனராகலின், **'எனக்கு** அருளினன்' என்று கூறவில்லை.

(9) இனி, இறைவனின் அருளியல்பினைத் தாம் அறிந்து கொள்ளவோ, அதனைப் பெறுதற்கு விரும்பவோ, சிறிதும் முற்படாமல் இருந்தும்கூட, மார்பின் கடுப்பாலே பாலைத் தரையிற் பீச்சிவிடுவாரைப் போல, இறைவன் தானாகவே வலிந்து வந்து தம்பால் அருள் செய்து கொண்டு நின்றான் ஆதலின், **'அருளினன்'** என்றார் எனினும் ஆம்.

(10) **அயர்வு:** மறதி. 'அயர்வு அறும் அமரர்கள்' இருவகையினர். எப்போதும் மறதியின்றிக்கே இருப்பவர்கள் (நித்தியர்கள்), மறதியிருந்து பின் நீங்கினவர்கள் (முக்தர்கள்).

(11) **அமரர்கள்;** இச்சொல் 'மரணம் இல்லாதவர்கள்' என்னும் இயல்பான பொதுப் பொருளில் வரவில்லை. பகவானுடைய அருளனுபவம் தடைப்படுமேயானால், அப்பொழுது தங்களை உள்ளவர்களாகக் கருதாதவர்கள் என்பது குறிக்க வந்தது.

(12) 'அமரர்' என்னும் சொல்லே பன்மையை யுணர்த்தப் போதுமாயினும், 'அமரர்**கள்**' என விகுதிமேல் விகுதியிட்டுக் கூறியது, அவர்களின் அளவற்ற பெருமைகளையும் நம்மனோர்க்கு நினைவூட்டி யுணர்த்துதற் பொருட்டு.

(13) **அதிபதி:** என்றது, இத்தகைய சிறந்த அமரர்க்கும் கூட, யானைக்குக் குதிரை வைத்தாற் போலப் பிடி கொடுக்குமாறு போன்று காட்டிப் பிடி கொடாமலே, அப்பாற்பட்டு நிற்பவன் எம்பெருமான் என்பதனை யுணர்த்துவதற்கு.

(14) **துயர் அறு சுடர் அடி:** எல்லா உயிர்களின் எல்லாத் துன்பங்களையும் போக்குதலையே என்றும் தமக்கு இயல்பாகவுடைய திருவடிகள் என்னும் கருத்தில் இத்தொடர்க்குத் 'துயர் **அறுக்கும்** சுடர் அடி' என ஸ்ரீ இராமாநுஜர்க்கு முன்பிருந்த முதலிகள், பொருள் கொண்டு வந்தனர்.

(15) ஆனால் எம்பெருமானார் ஆகிய **ஸ்ரீ இராமாநுஜர்,** அடியார்கள் துயர் தீரவே, பகவான் தான் துயர்தீர்ந்தவனாகின்றான். எம்பெருமான் **'பரதுக்க துக்கி'** யாதலால், அவன் பிறர்படும் துயர்கள் கண்டு, தான் துயர்படுபவன் ஆகின்றான். அடியார்களின் துன்ப நீக்கத்தினையே, தன்னுடைய துன்ப நீக்கமாகக் கொள்ளும் இயல்பினன் இறைவன் எனக் கூறி, 'துயர் **அறும்** சுடர் அடி' எனப் பொருள் விளக்குவராம்

(16) **சுடர் அடி:** அன்பர்கள் இறைவனிடத்தில் விரும்புவது திருவடிகளே. பால் உண்ணும் குழந்தைகள் தம்முடைய தாயின் மார்பிலே வாயை வைக்குமாறு போன்று, இவரும் "தேனே மலரும் திருப்பாதம்" என்று போற்றப்படும் திருவடிகளிலே ஈடுபடுகின்றார். இறைவனைக் காட்டிலும், அவனுடைய திருவடிகளே அன்பர்களுக்கு மிகவும் சிறந்தவை. "நின்னிற் சிறந்த நின் **தாளிணையவை**" என்பது பரிபாடல்.

# திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் 220 பக்கம் தொடர்ச்சி)

*சொல்லினால் தொடர்ச்சி நீ*
*சொலப்படும் பொருளும் நீ*
*சொல்லினாற் சொலப்படாது*
*தோன்றுகின்ற சோதி நீ*
*சொல்லினாற் படைக்க நீ*
*படைக்க வந்து தோன்றினார்*
*சொல்லினாற் சுருங்கநின்*
*குணங்கள் சொல்ல வல்லரே?*

**(பொழிப்புரை)** வேதாந்த நூல்களின் வாயிலாக அனைவருக்கும் உறவை உண்டுபண்ணுபவன் நீ! சிற்சில புராண இதிகாசங்களில் சொல்லப்படுகின்ற பிற தெய்வங்களுக்கெல்லாம் உயிர்க்குயிராய் அந்தர்யாமியாய்க் கலந்து நிற்பவன் நீ! சொற்களினால் கூறி விளக்க முடியாதபடி, ஞானிகளுக்கு ஒளி வடிவாகத் தோன்றிக் காட்சி தருபவன் நீ! நீ அருளிச்செய்த வேதங்களின்படி, உலகங்களைத் தோற்றுவிப்பதற்காக, உன்னாலே தோற்றுவிக்கப்பெற்ற பிரமன் முதலானவர்கள், சொற்களின் துணைகொண்டு சுருக்கமாகவேனும் நின்னுடைய குணநலங்களை அறிந்து அளந்து கூறவல்லவர்கள் அல்லர்.

சொல்லினால் - வேதாந்த நூல்களினால்.

தொடர்ச்சி - உறவு. உறவை உண்டு பண்ணுபவன்.

**(கருத்து)** பிரமன் முதலாயினோர் நின்னால் படைக்கப்பட்டவர்களும், நின் புகழை அளந்து அறிந்து கூறமாட்டாதவர்களும் ஆக இருத்தலின், நீ ஒருவனே எம்மால் வழிபடத்தக்க பெருமான் ஆவாய். (11)

*உலகு தன்னை நீ படைத்தி*
*உள் ஒடுக்கி வைத்தி மீண்டு*
*உலகு தன்னுளே பிறத்தி*
*ஓர் இடத்தை அல்லையால்*
*உலகு நின்னொடு ஒன்றிநிற்க*
*வேறு நிற்றி ஆதலால்*
*உலகில் நின்னையுள்ள சூழல்*
*யாவர் உள்ள வல்லரே?*

**(பொழிப்புரை)** உலகங்களை நீயே படைக்கின்றாய், ஊழிகாலத்தில் நின்

---

**திருவாய்மொழி—தொடர்ச்சி**

(17) இப்பாடலில் 'உயர்வற **உயர் நலம்** உடையவன்,' 'அயர்வறும் அமரர்கள் **அதிபதி**' என்றதனால், அடையப்படும் இறைவனின் தன்மை (பிராப்ய வேஷம்) கூறப்பட்டது; '**மயர்வற**' என்றதனால் விரோதி கழிந்தபடி கூறிற்று; '**அருளினன்**' என்றதனால் இறைவனே சாதனம் என்று சொல்லிற்று; **தொழுதெழு** என்றதனால் பிராப்தி பலமான கைங்கர்யத்தின் திறம் உணர்த்திற்று; **என்மனனே** என்றதனால் தூய மனமுடையவனே இதற்கு அதிகாரி என்று சுட்டிற்று.

(18) நான்கு வேதங்களின் சுருக்கம் திருமந்திரம்; திருமந்திரத்தின் சுருக்கம் அகர எழுத்து. அதுபோல நான்கு வேதங்களின் சுருக்கம் **திருவாய்மொழி**; திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களின் சுருக்கம் **முதல் திருப்பதிகம்**; அதனுடைய சுருக்கம் **முதல் மூன்று** பாசுரங்கள்; அவற்றின் சுருக்கம் **முதற் பாசுரம்.** இம் முதற் பாசுரத்தினுடைய சுருக்கம் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்னும் **முதல் அடி.**

இவ்வாற்றால் திருவாய்மொழியின் முதல் திருப்பாடல் ஆகிய இச்செய்யுளின் சிறப்பினை யாவரும் இனிதுணரலாம்.

—தொடரும்

திருவயிற்றினுள் ஒடுக்கி வைத்திருந்து, அவற்றை நீயே காப்பாற்றுகின்றாய்! அங்ஙனம் உலகங்களையெல்லாம் காப்பாற்றுகின்ற நீயே, இவ்விடத்தில் வந்து திருவவதாரம் செய்கின்றாய்! இன்ன இடத்தையுடையவன் என்று ஓர் இடத்தையும் சுட்டிக் கூறமுடியாமல், எங்கும் வியாபித்திருப்பவன் நீ! உலகம் முழுவதும் சரீரியான உன்னிடத்தில் சரீரமாய்க் கலந்து நின்று தொழிற்பட, நீ அவற்றிற்கு வேறாக நிற்கின்றாய்! இங்ஙனம் வியக்கத்தக்க பல குணங்களையுடைய நின்னை, உலகத்தில் யாவர் அறிய வல்லவர்கள்?

**சூழல்** - வியக்கத் தக்க தன்மைகள்.
**உள்ள** - நினைக்க, அறிய.

**(கருத்து)** உலகங்களையெல்லாம் படைத்துக் காத்து ஒடுக்குபவனும், உலகங்களெல்லாம் சரீரமாக நிற்க அவற்றிற்குச் சரீரியாயும் விளங்குகின்ற பெருமான் ஆகிய நின்னை, அறிய வல்லவர்கள் ஒருவரும் இல்லை. (12)

**இன்னை என்று சொல்லல் ஆவது**
**இல்லை யாதும்; இட்டிடைப்**

**பின்னை கேள்வன் என்பர், உன்**
**பிணக்கு உணர்ந்த பெற்றியோர்;**

**பின்னை ஆய கோல மோடு**
**பேரும் ஊரும் ஆதியும்**

**நின்னை யார் நினைக்க வல்லர்,**
**நீர்மையால் நினைக்கிலே?**

**(பொழிப்புரை)** நீ இத்தகையவன் என்று சொல்லக்கூடிய தன்மை எதுவும் இல்லை. உன்னுடைய திருவவதாரங்கள் முதலியன பற்றிய செய்திகளில், அன்பர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளை யுணர்ந்திருக்கும் பெரியவர்கள், உன்னை நுண்ணிய இடையை யுடைய **நப்பின்னைப் பிராட்டியின் கணவன்** என்று கூறுவார்கள். நின்னுடைய எல்லா நலங்களும் பொருந்திய அழகிய திருவுருவத்தையும், திருநாமங்களையும், திருத்தலங்களையும், நீ திருவுருவங்களை மேற்கொள்ளுதற்குரிய காரணங்களையும், நின்னுடைய திருவருளினாலே நீ அறிவிக்க அறிதலையன்றி, மற்றைப்படி யாவர்தான் அறிய வல்லவர்கள் ஆவர்?

**இன்னை** - நீ இத்தகையவன்.
**உன்பிணக்கு** - உன்னைப் பற்றிய விவாதம்.
**நீர்மையால்** - திருவருளினால்.

**(கருத்து)** எம்பெருமானுடைய பெருஞ்சிறப்புக்களையும், அவதார நாட்பங்களையும், அவன் தானே தன் அருளினால் உணர்த்தினாலன்றி, எவரும் அவற்றைத் தம்முடைய முயற்சியினால் அறிந்து கொள்ளல் இயலாது. (13)

**தூய்மை யோகம் ஆயினாய்**
**துழாய் அலங்கல் மாலையாய்**

**ஆமை யாகி ஆழ்கடல் துயின்ற**
**ஆதி தேவ! நின்**

**நாம தேயம் இன்னது என்ன**
**வல்லம் அல்ல; ஆகிலும்**

**சாம வேத கீதன் ஆய**
**சக்ர பாணி அல்லையே?**

**(பொழிப்புரை)** உலகத்தவர்கள் அழுக்குடம்பு நீங்கித் தூய்மையான அருளுடம்பு பெறும்படி செய்தருள்பவனே! ஆமை வடிவம் கொண்டு, ஆழ்ந்த கடலிலே திருக்கண் வளர்ந்தருளிய ஆதிதேவனே! நின் திருநாமங்கள் உணர்த்தும் குணச்சிறப்புக்களை இன்னின்னவை என்று சொல்லுவதற்குக் கூட, யாங்கள் திறமையுடையவர்கள் அல்லோம் எனினும், சாமவேதத்தினாலே புகழ்ந்தெடுத்து ஓதப்பெற்ற பரம்பொருள் நீயே யன்றோ! என்பதனை மட்டும் சொல்ல வல்லோம்.

துழாய் அலங்கல் - துளசி மாலை.

அலங்கல் - அசைதல் எனினுமாம்.

வல்லம் அல்ல - நாங்கள் வல்லமை யுடையவர்கள் அல்ல.

சக்ரபாணி - கையில் சக்கரத்தை ஏந்தியிருப்பவன்.

**(கருத்து)** இறைவனுடைய குண நலங்களை முழுவதும் அளந்து அறியத் திறமையில்லாவிடினும், அவை வேதங்களினால் மிக்கவும் சிறந்தெடுத்துப் புகழ்ந்தோதப்படுபவை என்பதனை மட்டும் நன்கறியப்பெற்றுளேன் என்றபடி. (14)

அங்கம் ஆறும் வேதம் நான்கும்
ஆகி நின்று அவற்றுளே
தங்கு கின்ற தன்மையாய் !
தடங்கடற் பணத்தலை
செங்கண் நாகணைக் கிடந்து
செல்வம் மல்கு சீரினாய் !
சங்க வண்ணம் அன்ன மேனி
சார்ங்க பாணி அல்லையே ?

**(பொழிப்புரை)** சிட்சை வியாகரணம் சந்தசு நிருக்தம் சோதிடம் கற்பம் என்னும் **ஆறு** அங்கங்களும், இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் **நான்கு** வேதங்களும் அருளிச் செய்து, அவற்றின் உட்பொருளாக எழுந்தருளி இருக்கும் தன்மையை யுடையவனே! பரந்த பெரிய கடலில், படங்களையுடைய தலையிலே சிவந்த கண்களை யுடையவனான **திருவனந்தாழ்வான்** ஆகிய படுக்கையில், அறிதுயில் கொள்ளுகின்ற நிறைந்த செல்வத்தையும் குணங்களையும் உடைய பெருமானே! சங்கினுடைய நிறம்போன்ற திருமேனியை யுடையவனாய்க் கிருதயுகத்தில் திருவவதாரம் செய்து, பின்னர்த் திரேதாயுகத்தில் இட்சுவாகு குலத்திலே கையும் வில்லுமாக வந்து தோன்றியவன் நீயேயன்றோ?

பணம் - பாம்பின் படம்.

நாகணை - நாக + அணை; பாம்பாகிய படுக்கை.

சார்ங்கம் - வில்; தமிழில் 'சாரங்கம்' எனவரும்.

பாணி - கை, பண்ணுவது.

**(கருத்து)** வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அருளிச்செய்து, அடியார்களுக்கு அருள் செய்தற்பொருட்டுத் திருப்பாற் கடலிலே கண்வளர்ந்து, பின்பு அங்கு நின்றும் புறப்பட்டு அடியார்கள் உவந்த வடிவங்களையே உனக்கு வடிவமாகக் கொண்டு திருவவதாரம் புரிந்தாய். (15)

தலைக்கணத் துகட் குழம்பு சாதி
சோதி தோற்றமாய்
நிலைக்க ணங்கள் காண வந்து
நிற்றி யேலும், நீடிலும்
கலைக்க ணங்கள் சொற்பொருள்
கருத்தினால் நினைக்கொணா
மலைக்க ணங்கள் போல் உணர்த்தும்
மாட்சி, நின்றன் மாட்சியே !

**(பொழிப்புரை)** முதன்மை பெற்ற தேவகணங்களும், எளிய தாவரகணங்களும், கலவைப் பிறவிகளாகிய விலங்கு சாதி மனிதசாதிகளும் ஆகியவற்றிலே பேரொளி யுடைய வடிவினனாகத் திருவவதாரம் செய்து, தேவர்கள் மட்டுமேயன்றித் தாவரப் பொருள்களும் கூட உன்னை அனுபவிக்கும்படி வந்து காட்சி தருகின்றாய்! என்றாலும், பரந்து விரிந்துள்ள வேத வேதாந்தங்கள் ஆகிய நூற்கூட்டங்கள், பெயரளவினாலும் அவற்றின் கருத்துப் பொருள்களினாலும் உன் பெருமைகளை நினைப்பதற்குக் கூட முடியாமல், மலைகளின் கூட்டங்களைத் தனித்தனியே எடுத்துரைத்துப் புனைந்து கூற இயலாத நிலையில், அவற்றை ஒரு மொத்தமாகச் சேர்த்துத் தொகுதியாகப் புனைந்துரைக்குமாறு போலப் புகழ்ந்து போற்றியமைகின்றன! அத்தகைய மாட்சிமை, நின்னுடைய சிறந்த மாட்சிமை ஆகும்.

தலைக்கணம் - தேவகணங்கள்.

துகள் - (எளிய சிறிய) தாவரகணங்கள்.

குழம்பு சாதி - விலங்கு, மனித கணங்கள்.

நிலைக்கணங்கள் - நிலைபெற்ற எல்லா உயிர்த் தொகுதிகளும்.

கலைக்கணங்கள் - நூற்றொகுதிகள்.

CONNEM LIBRARY
10 JAN 1966
MADRAS




ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள்,
உற்சவர் தர்மாதி பீடம், திருவல்லிக்கேணி.

**(கருத்து)** வேதவேதாந்த சாத்திரங்களாலும்கூட அளவிட்டு அறியமுடியாதபடி, நின்னுடைய திருவவதாரச் சிறப்புக்கள் உள்ளன. அவற்றை ஒரு சிறிதளவே நூல்களும் கூறுதல் இயலும். (16)

ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி
நாலு மூர்த்தி நன்மைசேர்
போக மூர்த்தி புண்ணி யத்தின்
மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாக மூர்த்தி சயனமாய்
நலங்கடற் கிடந்து மேல்
ஆக மூர்த்தி ஆய வண்ணம்
என்கொல்? ஆதி தேவனே!

**(பொழிப்புரை)** எல்லாவற்றிற்கும் காரணமாகத் திகழும் ஆதிதேவன் ஆகிய பெருமானே! பரமபதத்தில் உள்ள **பரவாசுதேவ** மூர்த்தியாய், **ஸங்கர்ஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன்** என்னும் மூன்று மூர்த்திகளாய், **பிரதானம் புருஷன் அவ்வியக்தம் காலம்** என்னும் இவற்றைச் சரீரமாகக் கொண்ட நான்கு மூர்த்திகளாய், நன்மை பொருந்திய போகத்தைத் தரும் மூர்த்தியாய், புண்ணியமே வடிவம் கொண்டதொரு மூர்த்தியாய், இங்ஙனம் எண்ணில்லாத பலபல மூர்த்தியாய், நல்ல திருப்பாற் கடலில் திருவனந்தாழ்வான் திருமேனியைப் படுக்கையாகக் கொண்டு கண் வளர்ந்தருளி, அதற்கு மேலே அடியார்கள் உவந்த உருவம் ஆகிய **அர்ச்சாவதாரம்** ஆகிய திருமேனி கொண்டு அவதரித்த நினது தன்மை, என்னே! என்னே!!

ஏகம் - ஒன்று, ஒப்பற்றது.
நாலு - நான்கு.
போகம் - இன்பம், அனுபவம்.
சயனம் - படுக்கை.
ஆகமூர்த்தி - அர்ச்சாவதாரத்திருமேனி.

**(கருத்து)** பரவாசுதேவ மூர்த்தியாக **நித்திய விபூதியை** நிர்வஹித்தும், வியூகம் முதலாகத் திருவவதரித்து **லீலா விபூதியை** நிர்வஹித்தும் அமையாமல், அவற்றிற்கும் மேலே 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவும் தானாய்' **அர்ச்சாவதாரம்** தாங்கிப் போந்தருளும் நின்னுடைய பெருங்கருணைத் திறமும், எளிமைத்தன்மையும் எத்தகையன என்று வியந்தபடி. (17)

விடத்த வாய் ஓர் ஆயிரம்
இராயிரம் கண் வெந்தழல்
விடுத்து வீழ்வி லாத போகம்
மிக்க சோதி தொக்கசீர்
தொடுத்து மேல் விதானம் ஆய
பௌவ நீர் அராவணை
படுத்த பாயல் பள்ளி கொள்வது
என்கொல்? வேலை வண்ணனே!

**(பொழிப்புரை)** கருங்கடலின் நிறத்தையுடைய எம்பெருமானே! விஷத்தையுடைய ஓர் ஆயிரம் வாய்களினின்றும், இரண்டாயிரம் கண்களினின்றும் கொடிய நெருப்புப் பொறிகள் பறக்கும்படி விட்டுக்கொண்டு, ஒரு காலத்தும் அழிவு இல்லாத பகவதநுபவத்தையுடையவனாய், மிகுந்த பேரொளி வடிவினனாய், சிறப்பு மிகுந்ததாகக் கட்டப்பெற்ற மேற்கட்டியாகிய விதானம் போன்ற தலைகளையுடைய **திருவனந்தாழ்வான்** ஆகிய படுக்கையிலே, கடல் நீரிலே நீ கண் வளர்ந்தருள்வது, எத்தகைய வியப்பு!

விடத்த - நஞ்சினையுடைய.
வீழ்வு இல்லாத - அழிவு அற்ற.
தொடுத்து - கட்டப்பெற்று.
விதானம் - மேலே பரப்பும் விரிப்பு.
பௌவம் - கடல்.
அரா அணை - பாம்பு ஆகிய படுக்கை.

**(கருத்து)** பெருமான் திருப்பாற்கடலிற் பள்ளி கொண்டருளும் சிறப்பினை நினைவுகூர்ந்து, ஆழ்வார் அதனில் ஆழங்காற்பட்டு மகிழ்ந்துருகி அருளிச் செய்தபடி. (18)

—(தொடரும்)

# திருப்புகழ் அமிழ்தம்

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்;

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை,

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே ;

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே ;

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா ;

அத்துயர் அதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி,

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம்அருள் பெருமாளே !

**(பொழிப்புரை)** திருக்கையிலே நிறைந்த பழங்களையும் அவலையும் பொரியையும் அப்பத்துடன் உண்ணுகின்ற யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானே! திருவடிகளைத் துதித்துப் பலகாலும் தியானித்து வழிபடும் அடியார்களின் உள்ளங்களில் தங்கியிருந்து வாழ்பவரே! அன்புடன் போற்றி வணங்குபவர்களுக்கு விரும்புவனவற்றை யெல்லாம் அளித்தலாற் கற்பகமரம் போன்றவரே! என்று துதி செய்தால், சஞ்சிதம் பிராரத்துவம் ஆகாமியம் என்னும் வினைகள் அனைத்தும் விரைவிற் கழிந்தொழியும்.

ஆதலின் ஊமத்த மலரையும், பிறைச் சந்திரனையும் தலையில் அணிந்துள்ள சிவ பெருமானின் புதல்வனும், மற்போர் புரிகின்ற திரண்ட தோள்களையுடைய மத யானையும், மத்தளம் போன்ற பெரிய வயிற்றை யுடையவரும், பெண்ணினல்லாள் என்னும் உத்தமி ஆகிய உமாதேவியாரின் தவப்புதல்வரும் ஆகிய விநாயகப் பெருமானை, மணமும் தேனும் விரிந்து துளிக்கின்ற நல்ல மலர்களைக் கொண்டு, யான் எக்காலத்தும் அன்புடன் பணிந்து வழிபடுவேன்.

இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழினுலும் முறையே விரித்து விளக்கப் பெற்ற மகாபாரத வரலாற்றை, மிகவும் பழமை வாய்ந்த மகாமேரு மலையில் முன் ஒரு காலத்தில் வியாச முனிவர் கூறிக் கொண்டுவர, ஒரு தந்தத்தை முறித்து எழுதுகோலாகக் கொண்டு எழுதி வைத்த முதல்வராகிய பெருமானே!

திரிபுரங்களைச் சிரித்தே எரித்தவர் ஆகிய அந்தச் சிவபெருமான், ஊர்ந்து நின்று செலுத்திய தேரினுடைய அச்சானது, தூள்தூளாகப் பொடிந்து போகும்படி செய்தருளிய மிக்க துணிவினை யுடையவரே!

வள்ளியம்மையார் மீது அளவில்லாத காதல்கொண்டு, அதனுல் சுப்பிரமணியர் ஆகிய முருகப்பெருமான் பெரிதும் துயரப்பட்ட அந்தத் தினைப்புனத்தின்கண், ஒரு காட்டானை வடிவம் கொண்டு சென்று, அந்தக் குறவர் குலமகள் ஆகிய வள்ளியம்மையாருடன் அந்தச் சிறிய முருகப் பெருமானை, அந்தக் கணத்திலேயே திருமணம் புரிந்து கொள்ளும்படி உதவி செய்தருளிய பெருமானே!

[கப்பிய - உண்ட; கரி - கரத்தை யுடையது, யானை; கற்பகம் - தேவருலகில் உள்ளதும், விரும்பியவற்றை யெல்லாம் தரவல்லதும் ஆகிய ஒரு மரம்; அஃது ஈண்டு உவமையாகு பெயராய் அடியவர்கள் விரும்புவனவற்றை யெல்லாம் தரும் விநாயகப் பெருமானைக் குறித்தது. 'கற்பக விநாயகர்' எனப் பெயர் வழங்குதலும் காணலாம்.

மத்தம் - ஊமத்தம்பூ என வழங்கும். 'பெண்ணின் நல்லாள்' ஆதலின் உமாதேவியாரை உத்தமி என்ற சிறப்பு நினைந்து இன்புறற்பாலது. அருணகிரி நாதர் வாழ்ந்த 15ஆம் நூற்றுண்டில், பாரதக்கதை தமிழ் நாட்டிற் பெருவழக்காகப் பரவிப் பயிலப் பெற்று வந்தமையின், அதனை 'முத்தமிழ் அடைவு' என்ருர். விநாயகர் பாரதக் கதையினை மகாமேரு மலையில் தமது தந்தத்தினை எழுத்தாணியாகக் கொண்டு எழுதிய வரலாற்றினை, ஆசிரியர் வில்லிபுத்தூராரும் தாம் இயற்றிய நூலின்கண், "நீடாழி யுலகத்து மறை நாலொடு ஐந்தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள், ஏடாக மாமேரு வெற்பாக அம்கூர் எழுத்தாணி தன் கோடாக எழுதும் பிரான்" எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். 'அச்சிவன்' என்றது சிவபிரானின் அருமை பெருமைகளை யெல்லாம் உள்ளடக்கி நிற்கும் உலகறி சுட்டு. 'அச்சது பொடிசெய்த' இடமே, இன்று அச்சிறுபாக்கம் (அச்சு+இறு+பாக்கம்) என வழங்கப் பெறுகின்றது.

விநாயகக் கடவுள் தம்மை வழிபடாதவர்க்கு இடையூற்றை யுண்டாக்கி மறக்கருணையும், வழிபடுபவர்களுக்கு இடையூற்றை நீக்கி அறக் கருணையும் செய்தருளும் இயல்பின ராதலின், அவ்விருதிறமும் இப்பாடலிற் குறிக்கப்பட்டது. சிவபிரானின் தேரினைப் பொடி செய்தது மறக் கருணையும், முருகனுக்கு வள்ளியை மணம் புரிவித்தது அறக்கருணையும் ஆகும்.] (1)

---

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேன்அமுதத்து உணர்வூறி;

இன்பரசத் தேபருகிப் பலகாலும் -
என்றன் உயிர்க்கு ஆதரவுஉற்று அருள்வாயே;!

தம்பிதனக் காகவனத் தணைவோனே!
தந்தைவலத் தால்அருள்கைக் கனியோனே;!

அன்பர்தமக்கு ஆனநிலைப் பொருளோனே!
ஐந்துகரத்து ஆனைமுகப் பெருமானே!

**(பொழிப்புரை)** தேவர் உலகத்திலுள்ள கற்பகம் முதலிய மரங்களும், காமதேனு, சிந்தாமணி என்பவைகளும் போலக் கொடுப்பதற்கு என் உள்ளம் நெகிழ்ந்து,

ஒளிவீசும் கடலில் தோன்றிய இனிய அமிழ்தம் போன்ற உணர்வு, என்னுடைய உள்ளத்தே ஊற்றெடுத்து, அதனாற் பெருகும் இன்பச் சாற்றினை நான் பல காலத்தும் உண்டு மகிழும்படி, என்னுடைய உயிரின் பொருட்டு எனக்கு நின் ஆதரவினை வைத்து அருள் புரிவாயாக!

தம்பியாகிய முருகன் பொருட்டுக் காட்டில் அணைந்து சென்றவனே! தந்தையாகிய சிவபெருமானை வலஞ்செய்து வணங்கியதனால், அவரால் மகிழ்ந்து அளிக்கப்பெற்ற கனியைக் கையில் வைத்திருப்பவனே! அன்பர்களுக்கு வேண்டும் நலங்களைச் செய்கின்ற, நிலையான செல்வத்தைப் போன்றவனே! ஐந்து கரங்களையும், யானை முகத்தையும் உடைய பெருமானே!

[உம்பர் — தேவர்கள்; தரு — மரம், கற்பக மரம்; தேநு—காமதேநு; மணி—சிந்தாமணி; தம்பி—முருகன்; வள்ளியம்மையாரை மணம் புணர்விப்பதற்காக முருகனின் பொருட்டு, விநாயகர் தினைப் புனத்திற் காட்டு யானையாக வந்தருளினர்ஆதலின், "தம்பி தனக்காக வனத்து அணைவோனே" என்ருர். ஒரு மாங் கனியின் பொருட்டு முருகன் மயில்மீது ஏறி உலகை வலம் வந்ததும், விநாயகர் சிவபிரானையும் உமையம்மையாரையும் வலம் வந்ததும், அதனால் விநாயகர்க்கே கனி கிடைத்ததும், சிவபிரான் முருகனைப் 'பழம் நீ' எனப் புகழ்ந்து கூறி மகிழ்வித்ததும் ஆகிய வரலாறு, "தந்தை வலத்தால் அருள் கைக் கனியானே" என்னும் வரியினுற் சுருக்கமாகக் குறிப்பிடப்பெற்றது. நிலைப் பொருளோன் — அழியாத செல்வமாக இருப்பவன்.] (2)

—தொடரும்

# 'திருநெறிய தமிழ்'

(முன் இதழ்த் தொடர்ச்சி)

முற்றல் ஆமை இனநாக மோடு
ஏன முளைக்கொம்பு அவைபூண்டு
வற்றல் ஓடு கலனாப் பலிதேர்ந்து
எனது உள்ளங் கவர்கள்வன்,
கற்றல் கேட்டல் உடையார் பெரியார்
கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம்
மேவிய பெம்மான், இவன் அன்றே?

(பொழிப்புரை) முற்றிய ஆமை ஓடு, இனம் பாம்பு எனும் இவைகளுடன், பன்றியின் முளை போன்ற கொம்பு ஆகியவைகளை அணிகலனாக அணிந்து, தசை கழிந்த பிரமனது தலை ஓட்டினைப் பலிப் பாத்திரமாகக் கொண்டு, தேவர்களின் குருதியையும் அகந்தையையும் பிச்சையாக ஏற்று, என் உள்ளத்தைக் கவர்ந்து தன் வயப் படுத்திக்கொண்ட கள்வன், உண்மை நூல்களைக் கற்றலும் கேட்டலும் உடையவர்களாகிய பெரியவர்கள், தன்னுடைய திருவடிகளைத் தம்முடைய கைகளினால் வணங்கித் துதிக்க, காளை மாட்டை ஊர்தியாகக் கொண்டருளிய, பிரமாபுரம் என்னும் சீர்காழியில் எழுந்தருளியுள்ள பெருமான் ஆகிய இவனேயன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[முற்றல் - முதிர்தல், கெட்டிப்படுதல்; ஏனம் - பன்றி; வற்றல் ஓடு - வற்றிப் போன தலை ஓடு, பிரமகபாலம்; கலன் - பாத்திரம்; பலிதேர்ந்து - பிச்சை எடுத்து; 'செயற்கரிய செய்வார் பெரியர்' எனத் **திருவள்ளுவர்** கூறியது போல, இங்கு ஞானசம்பந்தர் 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்று அருளிச்செய்த கருத்தும்போற்றியுணரற் பாலது. பெற்றம் - எருது, காளை மாடு.]

நீர்பரந்த நிமிர் புன்சடைமேல்
ஓர் நிலா வெண்மதி சூடி
ஏர்பரந்த இன வெள்வளை சோர
என் உள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந்த உலகின் முதலாகிய
ஓரூர் இது என்னப்
பேர்பரந்த பிரமா புரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே!

**(பொழிப்புரை)** கங்கை நீர் பரந்த நீண்ட புல்லிய சடையின்மேல், ஒப்பற்ற ஒளியையுடைய வெண்மையான சந்திரனைத் தலையின்கண் தரித்து, அழகுமிக்க கூட்டமாகிய வெண்மையான வளையல்கள் கழன்று விழும்படி, என் உள்ளத்தைக் கவர்ந்து என்னைத் தன் வயமாக்கிக் கொண்ட கள்வன். ஊர்கள் நிறைந்து பரவிய இவ்வுலகினிடத்து முதன்மைபெற்ற ஒப்பற்ற ஊர் இது என்று யாவரும் கூறுமாறு, மிகவும் புகழ் பரவிய சீர்காழியின்கண் எழுந்தருளியுள்ள பெருமான் ஆகிய இவனேயன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[ஏர் - அழகு, வெள்வளை - வெண்மையான சங்கினாற் செய்த வளையல்கள், ஞானசம்பந்தர் உருவானும், வயதானும், குழந்தைமை நிலையினராயினும், பண்டுதொட்டுப் பரமன்பாற் பயின்றுவந்த அன்பின் நிலையில் மிகவும் முதிர்ச்சியுற்று நின்றவராதலின், **நாயக நாயகி** யுணர்வு மேலிட்டு 'இன வெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்' என்றார். 'உலகில் முதல் ஆகிய ஓர் ஊர்' என்று புகழ்ந்ததனால், சீர்காழியின் பெருமையை யுணரலாம்.

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி
விளங்கு தலை ஓட்டில்
உண்மகிழ்ந்து பலி தேரிய வந்து
எனது உள்ளங் கவர்கள்வன்,
மண்மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை
மலிந்த வரை மார்பிற்
பெண்மகிழ்ந்த பிரமா புரம்மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** வானத்தின் கண் திரிந்து மகிழ்ந்த மும்மதில்களையும் அம்பு எய்து அழித்ததே யன்றி, ஒளி வீசுகின்ற பிரமனின் தலை ஓட்டில் உள்ளம் மகிழ்ந்து பிச்சை ஏற்பதற்கு எழுந்தருளி, என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்து தன் வயப் படுத்திக் கொண்ட கள்வன், நிலவுலகத்தை விரும்பிய பாம்பும் - கொன்றை மலர் மாலையும் நிறைந்த - மலையைப் போன்ற மார்பின் கண், உமாதேவியாரை வைத்துக் கொண்டு மகிழ்ந்த, சீர்காழியில் எழுந்தருளிய பெருமான் இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[விண்—வானம், ஆகாயம்; மதில்—திரிபுரங்கள்; 'எய்தல்' ஆகிய காரணம் 'அழித்தல்' என்னும் காரியத்தை யுணர்த்தியது, உள் + மகிழ்ந்து—உள்ளம் மகிழ்ச்சி யுற்று. பலி தேரிய—பிச்சை எடுப்பதற்காக, 'தேரிய' என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினை எச்சம், வரை—மலை.] (5)

ஒருமை பெண்மை யுடையன் சடையன்
விடை ஊரும் இவன் என்ன
அருமை யாக உரைசெய்ய
அமர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்!
கருமை பெற்ற கடல்கொள்ள மிதந்ததோர்
காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே!

**(பொழிப்புரை)** தன்னுடைய திருவுருவின் ஒரு பகுதியில் பெண்தன்மை யுடையவன், சடைமுடியை யுடையவன், விடையினை ஊர்ந்தருள்பவன், என்று அருமையாகப் புகழ்ந்து துதிக்கும்படி, விரும்பி என்னுடைய உள்ளத்தினைக் கவர்ந்து தன்வயப்படுத்திக் கொண்ட கள்வன், கருமை நிறம் உடைய கடலானது பொங்கி எழ இந்தத் தலம் முன் ஒரு காலத்தில் தோணி ஆகி மிதந்த தன்மையது என்று புராணங்கள் புகழுமாறு மிகவும் சிறப்பு வாய்ந்த சீர்காழியில் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[ஞானசம்பந்தருக்கு இறைவன் அம்மையும் அப்பனுமாக வந்து காட்சியளித்ததனால், 'ஒருமை பெண்மையுடையன்' என அர்த்தநாரீசுவரத் திருமேனியின் இயல்பு ஈண்டுக் குறிக்கப்பட்டது. ஊழி வெள்ளத்திலும் அமிழாது. ஒரு காலத்தில் சீர்காழியானது தோணிபோல மிதந்ததனால், **தோணிபுரம்** என்னும் ஒரு பெயர் பெற்றது. அதனைக் 'கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இதுவென்னப் பெருமைபெற்ற பிரமாபுரம்' என்று ஞானசம்பந்தர் குறித்தருளினர். காலம் - யுகம், ஊழி.] (6)

மறைகலந்த ஒலி பாடலோடு
ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறைகலந்த இன வெள்வளை சோர
என் உள்ளம் கவர் கள்வன்
கறைகலந்த கடியார் பொழில் நீடு
உயர்சோலைக் கதிர் சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** வேதத்தின் சுரங்களோடு கூடிய சாம கானத்துடன், திருநடனத்தையும் உடையவராய், மழு ஆயுதத்தினை ஏந்திக் கொண்டு, கையினிடத்துப் பொருந்திய கூட்டமாகிய வெண்மையான வளையல்கள் கழன்று விழுமாறு, என் உள்ளத்தினைக் கவர்ந்து தன் வயப்படுத்திக் கொண்ட கள்வன், இருள் செறிந்த மணம் பொருந்திய பூஞ்சோலைகளிடத்துத் தனது ஒளிக் கதிர்கள் பரவும்படி, சந்திரன் பொருந்தித் தவழ்

கின்ற. சீர்காழியின்கண் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்.

['மறை ஒலி கலந்த பாடல்' எனக் கூட்டுக; இறை - கையிறை, முன்னங்கை; கறை கலந்த - இருள் பொருந்திய; கடி ஆர் - மணம் நிறைந்த; பொழில் - திருநந்த வனம்; சோலை - தோப்பு, பிறை கலந்த - சந்திரன் தவழ்கின்ற.]

(7)

சடைமுயங்கு புனலன் அனலன்
எரிவீசிச் சதிர்வு எய்த
உடைமுயங்கும் அரவோடு உழிதந்து
எனது உள்ளங் கவர்கள்வன்
கடல்முயங்கு கழிசூழ் குளிர் கானல்
அம்பொன் அம்சிறகு அன்னம்
பெடைமுயங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** சடையினைத் தழுவிய கங்கை நீரை யுடையவனும், கையில் ஏந்திய நெருப்பை யுடையவனும், வெப்பத்தைப் பரப்பி அழகு பொருந்தும்படி புலித்தோல் ஆகிய உடையினைத் தழுவி நிற்கும் பாம்புடன் திரிந்து வந்து, என் உள்ளத்தினைக் கவர்ந்து தன் வயப்படுத்திக் கொண்ட கள்வன், கடலோடு கலக்கின்ற கழிகள் சூழ்ந்த குளிர்ச்சியையுடைய கடற்கரைச் சோலையினிடத்து, அழகிய பொன் நிறம் வாய்ந்த சிறகினையுடைய அன்னச் சேவல்கள், தம்முடைய அன்னப் பேடைகளை அன்புடன் விரும்பிக் கலக்கின்ற சீர்காழியின் கண் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[புனல் - நீர்; அனல் - நெருப்பு; எரிவீசி - நெருப்பினைப் போன்று கொடிய நஞ்சினைக் கக்கி எனினும் பொருந்தும்; சதிர்வு - அழகு; உழிதந்து - அலைந்து திரிந்து; கானல் - கடற்கரைச் சோலை. பெடை - பெண் அன்னங்கள்; முயங்குதல் - தழுவுதல், கலத்தல்,]

வியர் இலங்கு வரையுந்திய தோள்களை
வீரம் விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலிசெற்று
எனது உள்ளம் கவர்கள்வன்
துயர் இலங்கும் உலகிற்பல ஊழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** திருக்கயிலாய மலையை எடுப்பதற்கு முயன்ற, வியர்வை பொருந்திய, வீரச்செயலை நிகழும்படி செய்த, உயர்ந்த மதில்களையுடைய இலங்கை மாநகரின் அரசன் ஆகிய இராவணனின் தோள்களை வலிமை அழியும்படி செய்து, என்னுடைய உள்ளத்தினைக் கவர்ந்து தன் வயப்படுத்திக் கொண்ட கள்வன், துன்பம் நிறைந்து விளங்குகின்ற இவ்வுலகத்திற் பல பல பிரளயங்கள் தோன்றும் சமயங்களிலெல்லாம், தன் பெயர் கெடாமல் தானும் நிலை பெற்று விளங்குகின்ற சீர்காழியின் கண் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்.

[வியர் இலங்கு தோள்களை - வரையுந்திய தோள்களை - வீரம் விளைவித்த தோள்களை - இலங்கை அரையன் தோள்களை எனக் கொள்க. உலகினைத் '**துயர் இலங்கும் உலகு**' எனக் குறிப்பிட்டருள்யுள்ள அருமைப்பாடு பெரிதும் போற்றுதற்கு உரியது.] (8)

தாள்நுதல் செய்து இறைகாணிய மாலொடு
தண்தாமரை யானும்
நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்
எனது உள்ளங் கவர் கள்வன்
வாணுதல் செய்மகளிர் முதலாகிய
வையத்தவர் ஏத்தப்
பேணுதல் செய் பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** திருமாலோடு, குளிர்ந்த தாமரையை இருக்கையாகக்

கொண்ட பிரமதேவனும், சிவபெருமானைக் காணும் பொருட்டு, அவர் தம் திருவடியையும் திருமுடியையும் முறையே தேடுதலை மேற்கொண்டு, பெருவடிவம் எடுத்துக் கொண்டு நெடுந்தூரம் சென்று முயன்றும் காண முடியாமல், தம் முயற்சிகளைக் கைவிட்டு நிற்க, நெருப்பு உருவமாக நீண்டு ஓங்கி நின்றவன், என் உள்ளத்தினைக் கவர்ந்து தன் வயப்படுத்திக் கொண்ட கள்வன், ஒளி பொருந்திய நெற்றியை யுடைய பெண்கள் முதலான உலகத்தவர்கள் துதித்து வணங்க, அவர்களைக் காப்பாற்றி யருளுகின்ற, சீர்காழியின்கண் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, **எனக்குப் பால் அளித்தான்.**

[தாள் - திருவடி, நுதல் - நெற்றி, திருமுடி, காணிய - காண்பதற்காக, இறை - சிவபெருமான். நீள்நுதல் என்னும் சொல், எதுகை நோக்கி **நீணுதல்** என வந்தது.] (9)

புத்தரோடு பொறியில் சமணும்
புறங்கூற நெறிநில்லா
ஒத்த சொல்ல உலகம் பலிதேர்ந்து
எனது உள்ளம் கவர் கள்வன்
மத்த யானை மறுக - உரிபோர்த்ததோர்
மாயம் இது என்னப்
பித்தர் போலும் பிரமாபுரம் மேவிய
பெம்மான், இவன் அன்றே?

**(பொழிப்புரை)** புத்தர்களும், நற்பேறு இல்லாத சமணர்களும் பழிதூற்றவும், உலகத்தவர் தத்தம் மனத்துக்கு இயைந்தவற்றைச் சொல்லவும் பிச்சை ஏற்று, என்னைத் தன் வயப்படுத்திக் கொண்ட கள்வன், மதம் பொருந்திய யானை யானது வருந்தும்படி, அதன் தோலைப் போர்த்துக் கொண்டதாகிய இது ஒரு மாயச் செய்கையாகும் என்று சொல்லும் வண்ணம், பித்தரைப் போன்று சீர்காழியில் எழுந்தருளிய பெருமான் ஆகிய இவனே யன்றோ, எனக்குப் பால் அளித்தான்!

[பொறி - அறிவு, நற்பேறு; 'நெறிநில்லா உலகம்' என இயைந்து, உலகமக்களுள் இழிந்தோரைக் குறிக்கும். 'மத யானை' எனற்பாலது 'மத்த யானை' என எதுகை நோக்கி வந்தது. யானை - கயாசுரன். உரி - தோல்.] (10)

அருநெறிய மறைவல்ல முனி, அகன்
பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன்தன்னை
ஒருநெறிய மனம்வைத்து உணர்
ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே.

**(பொழிப்புரை)** அரிய நெறிகளை விளக்குகின்ற வேதங்களில் வல்லவனாகிய பிரமதேவனை, மலர்கள் நிறைந்த அகன்ற பிரமதீர்த்தத்தை யுடைய சீர்காழியில் எழுந்தருளிய பெருநெறிக்குரிய பெருமான் ஆகிய இவ்விறைவனை, ஒருமைப்பட்ட மனம் கொண்டு அறிகின்ற திருஞானசம்பந்தன் ஆகிய யான் பாடிய, திருநெறிய தமிழ் ஆகிய இப்பதிகத்தினை ஓத வல்லவர்கள், தமது பழவினை நீங்கப் பெறுதல், எளியது ஆகும்.

[குறிப்புரை : சீர்காழியில் உள்ள திருக்குளம் பிரமதீர்த்தம் எனப் பெயர் பெறுமாகலின், அதனை "அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை" என்றார். மறைவல்ல முனி - பிரமன். ஞானம் கைவருவது மனம் ஒருமைப்பட்ட வழியே யாகலின், "ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன்" என்றது மிகவும் அருமைப்பாடு வாய்ந்தது.

இப்பாடல் திருக்கடைக்காப்பு எனப் பெயர் பெறும். இதன்கண் இத்திருப்பதிகம் பயின்றோர் எய்தும் பயன் கூறப்பட்டிருத்தல் காணலாம். இது போன்றவற்றைப் "பயன்கூறும் பாடல்" எனவும் கூறுவர். இதன்கண் இதனை அருளிச் செய்த ஆசிரியரின் பெயர் 'ஞானசம்பந்தன்' எனக்கிளந்து கூறப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பாகும்.

முதன்முதலாக ஞானசம்பந்தர் ஒருவர்தாம், தம்முடைய திருப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும்

# பெரியவர்கள் போற்றிய அரியநற் கவிதை

இதுபோது தமிழ் நாட்டில் திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகள் எங்கணும் இனிது நடைபெற்று வருகின்றன. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அவர்களால், தமிழக மக்கள் அனைவரும் திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்களைப் போற்றிப் பயிலத் தலைப்பட்டுள்ளனர். நாம் போற்றிப் பயிலத் தலைப்பட்டுள்ள திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்களை நம் முன்னோர்கள் ஆகிய பெரியவர்கள் பலரும்கூட, மிகவும் சுவைத்து மதித்துப் போற்றியிருக்கின்றார்கள்.

திருப்பாவையினை ஸ்ரீ இராமாநுஜர் முதலிய பெரியவர்கள் பலரும் போற்றியிருக்கின்றனர். இராமாநுஜர்க்குத் **திருப்பாவை ஜீயர்** என்றே ஒரு சிறப்புப் பெயர் உண்டு. திருப்பாவைக்கு மொழிக்கு மொழி தித்திப்பாக எழுதப் பெற்றுள்ள பழைய பல அரிய பெரிய சிறந்த விரிவுரை நூல்களாலும், நம் முன்னைப் பெரியவர்கள் எல்லோரும் அதனை எங்ஙனம் சுவைத்துப் போற்றி ஈடுபட்டு மகிழ்ந்து வந்தனர் என்பதனை நன்கினிது உணரலாம்.

திருவெம்பாவைக்கு அத்தகைய அரிய பெரிய மிகப் பழைய விரிவுரை நூல்கள் அமையப் பெறுவிடினும், அதனையும் சான்றோர்கள் ஆகிய நம் பெரியவர்கள் பலரும் தொன்றுதொட்டே பெரிதும் போற்றி வந்துள்ளமை காணலாம்.

**பழமையும் புதுமையும் :**

"ஒரு கவிஞனின் பெரும் பகுதியாகிய சிறந்த பணி யாதெனின், பொது மக்களின் பேச்சில் வெளிப்படாதன எவையோ, அவற்றை வெளிப்படுத்து

---

**'திருநெறிய தமிழ்'—தொடர்ச்சி**

தவறாமல் தம்முடைய பெயரைக் குறிப்பிட்டுக் கொள்ளும் புதிய வழக்கத்தினை நடைமுறைக்குக் கொணர்ந்தவராவர் எனலாம். பொதுவாகப் பண்டைய இந்திய தேச நூலாசிரியர்கள் அனைவருமே, தங்கள் பெயரினையும் தனித்தன்மையினையும் தங்கள் நூல்களில் வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொள்ளும் இயல்பினராவர். அதனால் அந்நூல்களைப் பயில்பவர்கள் நூலாசிரியரைப் பற்றியோ, நூலின் காலத்தைப் பற்றியோ, அது தோன்றிய சூழ்நிலைகளைப் பற்றியோ (Milieu), மற்றும் இயைபுடைய வேறுபல விவரங்களைப் பற்றியோ, அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் இலவாயின. அவற்றால் விளைந்த கருத்துக் குழப்பங்களுக்கு அளவேயில்லை.

ஆதலின், தம்முடைய திருப்பதிகங்கள் தோறும் தவறாமல் திருஞான சம்பந்தர் தம்முடைய பெயரைக் குறிப்பிட்டுள்ளமை, இலக்கியத்துறையிலேயே ஒரு சிறந்த புதிய நெறி, ஒரு புதிய திருப்பம் என்று துணிந்து கூறலாம். (11)]

1) "Tamil writers, like Hindu writers, **in** general, their individuality **in** the shade of their writings. Even the **names** of most of them are unknown......... The historical spirit, the antiquarian spirit, to a great degree even the critical spirit, are developments of modern times."

—**Dr. Rt. Rev. Robert Caldwell,**
Comparative Grammar, p. 128

"If the authors systematically hide even their own individualities, what light are they likely to throw on the history of their times? .....On the other hand, for instance, every hymn of **Sambandha** uniformly closes with a **benedictory verse,** where his own **name,** his **native place,** and other particulars are given".

—**Prof. P. Sundaram Pillai,** M.A.,
The Age of Thirugnana Sambandha,
p. 29-30.

வதும், அங்ஙனம் வெளிப்படுத்துங்கால் பொதுமக்களின் பேச்சு நடையினையே பயன்படுத்துவதும் ஆகும்'' (1) என ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். திருவெம்பாவையும் திருப்பாவையும் அம்முறையில் அமைந்துள்ள சிறந்த அழகிய கவிதையாகும். சங்க காலக் கடு நடையினைப் போல இல்லாமல், எளிய இனிய உரையாடல் முறையில் இவைகள் இயன்றுள்ளன. பொது மக்களின் பேச்சு நடையே இவைகளிற் பெரிதும் பயின்றுள்ளது. இலக்கிய நெறியில் இவற்றை ஒரு புதிய இனிய நறுமண மலர்கள் என நாம் குறிப்பிடலாம். சங்க காலத்தில் **அம்பா ஆடல்** எனப் புகழ்ந்து போற்றப்பட்ட பழம் பெரு நெறியினையே தழுவிப் பின்பற்றி அருளிச் செய்யப்பெற்ற இக்கவிதைகள், பழமையும் புதுமையும் ஆகிய இரு பெரு நலங்களும் இனிதியைந்து விளங்குகின்றன. 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' என வரும் திருவெம்பாவை வரிக்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாக, அத்திருப்பாவையே திகழ்தல் பெரிதும் மகிழ்தற்குரியது,

**தாயுமானவர் :**

திருவெம்பாவை மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில் அருளிச் செய்யப் பெற்றது. திருவண்ணாமலையே ஒரு காலத்தில் இறைவன் அடியும் முடியும் காண அரிய நிலையில் அளப்பருஞ் சோதி அனற் பிழம்பு வடிவினனாகத் தோன்றி நின்ற சிறந்த தலம். ஆதலின் அதனை நினைவு கூர்ந்தே போலும், மாணிக்கவாசகர் தமது திருவெம்பாவையினை 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' என்று தொடங்கியருள்கின்றார். இறைவன் சோதி வடிவினன் என்பது எல்லாச் சமயங்களுக்குமே ஒப்ப முடிந்ததொன்று. வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகச் சான்றோர் ஆகிய தாயுமான சுவாமிகள், இத் திருவெம்பாவையின் முதல் வரியிலேயே பெரிதும் ஈடுபட்டு இன்புற்றுள்ளார்.

> ஆதியந்தம் இல்லா
> அரிய பெருஞ் சோதி என்ற
> நீதிமொழி கண்டு, அதுவாய்
> நிற்கும் நாள் எந்நாளோ ?

எனவரும் அவர்தம் அருமைத் திருமொழியே, திருவெம்பாவையின்பால் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை விளக்குதற்குப் போதியதாகும்.

**சிறந்த சொற்றொடர்கள் :**

ஒரு சிறந்த கவிதையானது அடிக்கடி நினைவு கூர்தற்குரியனவும், அவ்வப்போது எடுத்து வழங்குதற்குரியனவும் ஆகிய அழகிய பல கருத்துக்களையும், அரிய பல சொற்கள் சொற்றொடர்களையும் (Quotable Quotes) உடையதாக இருத்தல் வேண்டும் என்பர். சொற்களையும் சொற்றொடர்களையும் வியத்தகு முறையில் எடுத்து அமைத்துக் கையாளும் வல்லமையே, கவிஞர்களின் சிறப்பியல்பாகும். ஒரு கவிஞனின் திறமை, அவன் கையாளும் சொற்களின் எண்ணிக்கையினால் மதிப்பிடப் பெறுவதில்லை. சொற்களை அவன் கையாளும் முறையும் நெறியும் கொண்டே மதிப்பிடப் பெறுகின்றது (2). ஷேக்ஸ்பியரும், மில்டனும், ஷெல்லியும், வோர்ட்ஸ்வொர்த்தும் போன்ற கவிஞர்கள் படைத்து வழங்கிய பல அருஞ் சொற்களும் தொடர்களும் ஆங்கிலேயரால் பெரிதும் விரும்பிப் போற்றிக் கையாளப் பட்டு வருதலைப் பலரும் அறிவர். அம்முறையில் நம்மனோர் அவ்வப்போது எடுத்து வழங்கத்தக்க பல சொற்களும் தொடர்களும் திருவெம்பாவையில் அழகுற அமைந்துள்ளன. அவற்றுள் ஒருசில வருமாறு ;—

1. வன்செவியோ நின்செவிதான் ?
2. அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் !

(1) "It is a great part of the Poet's work to express what is unexpressed in Common speech, and to use Common speech to do so......"

—Christopher Fry.

3. புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ ?
4. சித்தம் அழகியார் பாடாரோ ?
5. இத்தனையும் வேண்டும் எமக்கு !
6. கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே !
7. விண்ணுக்கு ஒரு மருந்து
8. வேத விழுப்பொருள்
9. கண்ணுக்கு இனியான்
10. பாலூறு தேன்வாய்ப் படிறீ !
11. ஓலம் இடினும் உணராய் உணராய் !
12. போன திசை பகராய் !
13. சிவன் என்றே வாய்திறப்பாய் !
14. தீசேர் மெழுகு ஒப்பாய்
15. வன்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
16. என்னே துயிலின் பரிசு ?
17. வாழி ஈதென்ன உறக்கமோ ?
18. ஆழியான் அன்புடைமை
19. ஊழி முதல்வன்
20. ஏழை பங்காளன்
21. பாரொருகால் வந்தனையாள்
22. எங்கும் இலாததோர் இன்பம்
23. பழஞ்சொற் புதுக்கும் அச்சம்......
24. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்

என்பன போன்று வரும் சொற்றொடர்கள் மிகவும் சுவையுடையன ; நவில்தொறும் நயம் பயப்பன ; ஓர் இனிய யாழினின்று மீட்டப்பெறும் இன்னிசையினைப் போல, இவற்றின் ஒவ்வொரு சொல்லும் பலப்பல நய ஒலிகளை அலையலையாகப் பரப்பி, நம்மை நனி மகிழச் செய்கின்றன (2). இத்தொடர்கள் நம்மனோர் பலகாலும் சுவைத்துணர்ந்து பயின்று கையாளத் தக்கவை என்பதில் ஐயமில்லை.

**எங்கெழிலென் ஞாயிறு :**

பாவை நோன்பு நோற்கும் இளம் பெண்கள், இறைவனை நோக்கி, 'எங்கள் பெருமானே ! உனக்கு ஒன்று கூறுகின்றோம். கேட்டருள்க, நின்னுடைய அன்பர்களையே நாங்கள் மணத்தல் வேண்டும். எம் கண்கள் நின்னையன்றி மற்றெதனையும் காண்டல் கூடாது. இங்கு இந்தப்படியே நிகழும் வண்ணம், நீ எங்களுக்கு ஒரு வரம் அளிப்பாயாயின், நாங்கள் எல்லா நலங்களும் பெற்றவர் ஆவோம். அதன் பின்னர், எங்களுக்குச் **சூரியன்** எந்தத் திசையில் உதித்தாலும் கவலை சிறிதும் இல்லை" என்று கூறி, இறைவனை வழிபட்டுப் பரவுகின்றனர்.

**திருத்தக்க தேவர் ;**

'இக் கருத்தமைந்த சிறந்த பாடலில், 'எங்கு எழில்என் ஞாயிறு எமக்கு ?" என்னும் ஓர் அழகிய இனிய சொற்றொடர் அமைந்து காணப்படுகின்றது. இத் தொடரின் அருமைப் பாட்டினை நம் பெரியவர்கள் பலரும் பலகாலும் எண்ணிச் சுவைத்து இன்புற்றிருக்கின்றனர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய **சீவகசிந்தாமணி**யினை இயற்றிய ஆசிரியர் திருத்தக்க தேவர், தம் நூலிற் கனகமாலையார் இலம்பகம் என்னும் பகுதியில், 'எங்கெழிலென் ஞாயிறு ?' என்னும் தொடரினை எடுத்து அமைத்துப் பின்வருமாறு பாடியுள்ளார்.

" எங்கள் வினையால் இறைவன்
வீடிய அஞ் ஞான்றே

எங்கள் உயிர் நம்பியொடு
யாங்கள் பிறந்தேமா

எங்கள் தமர் நம்பிக்கு இவர்
தோழர் என ஈந்தார்

எங்கெழில்என் ஞாயிறுஎன
இன்னணம் வளர்ந்தேம் "

---

(2) " In poetry, each word reverberates like the note of a well-turned **lyre**, and always leaves on it a multitude of **variations**".

—**Joubert**, Pensees.

**திருநாவுக்கரசர் :**

இவ்வாறே இவ்வரிய தொடரினைச் சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர் பெருமான், தம்முடைய திருத்தாண்டகம் ஒன்றில் எடுத்து வழங்கியிருக்கின்றார்.

> "வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
> வெய்யவினைப் பகையும் பைய நையும்
>
> எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
> எங்கெழிலென் ஞாயிறு எளியோம்
> அல்லோம்"

**முதல்வனும் முத்தொழிலும் :**

இறைவன் உலகைப் படைக்கின்றான், காக்கின்றான், அழிக்கின்றான் எனக் கடவுளை உடன்படும் சமயங்கள் பலவும் கூறுகிற்கும். அங்ஙனம் கூறுங்கால், கடவுள் இங்ஙனம் முத்தொழில் இயற்றுதல் எற்றுக்கு? என்னும் வினா நிகழும். அவ்வினாவுக்குத் தன்பொருட்டு என்றும், பிறர்பொருட்டு என்றும், வீணுக்கு என்றும், விளையாட்டுக்கு என்றும், வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகையில் விடை கூறும்.

தன்பொருட்டு எனின், வரம்பில் இன்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதொரு பயனில்லை. உயிர்களாகிய பிறர்பொருட்டு எனின், உயிர்களும் முதல்வனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? அபேதமாயின், அது தன்பொருட்டேயாம். பேதமாயின், அத்தகைய உயிர்களின் பொருட்டுத் தொழில்செய்ய ஓர் இயைபில்லை. பேதாபேதமெனின், ஒரு பொருட்கே இரண்டு தன்மை கோடல் பொருந்தாது. இனி, பயன் எதுவும் கருதாமையாகிய வீணுக்கு எனின், அது பித்தர் செய்யும் தொழிலோடு ஒக்கும். விளையாட்டுக்கு எனின், அஃது இளஞ்சிறார்களின் இயலும் செயலுமாக முடியும்.

> "பெறுவது இங்குஎன் படைத்து?
> பெற்றது விளையாட்டு என்னில்
>
> சிறுமழவு இறையது ஆகும்."
> —சித்தியார், பரபக்கம் :

என்று பௌத்தர்களும் இதனை மறுத்துரைப்பர். எனவே, இறைவன் உலகத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் விளையாட்டிற்காக என்னும் கொள்கை, சைவ சித்தாந்தத்திற்கும் உடன்பாடு அன்று.

**அருள்நந்தி சிவம் :**

ஆயினும் சைவசித்தாந்தச் சான்றோர்கள் ஆகிய ஆசிரியர் அருள் நந்திசிவமும், ஆசிரியர் உமாபதி சிவமும், இக்கொள்கையினை முற்றிலும் மறுத்துவிடாமலும், முற்றிலும் தழுவாமலும், ஓரளவு உடன்பட்டுக் கொள்ளக் காண்கின்றோம்.

> "சொன்னஇத் தொழில்கள் என்ன
> காரணம்? தோற்ற என்னின்,
>
> முன்னவன் விளையாட்டு என்று
> மொழிதலும் ஆம் . . ."
> —சுபக்கம், 56

என எச்சவும்மை கொடுத்தே, ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் அருளிச் செய் திருத்தலைக் காணலாம்.

**உமாபதி சிவம் :**

அருள் நந்தி சிவத்தினைப் பின்பற்றி, அவர்தம் வழிவந்த உமாபதிசிவம் அவர்களும், தாம் இயற்றிய சிவப்பிரகாசம் என்னும் சைவசித்தாந்த நூலில், மேலே குறித்த சிவஞான சித்தியார் செய்யுளை அடியொற்றி இசைந்து,

> "ஏற்ற இவை அரனருளின்
> திருவிளையாட்டு ஆக
>
> இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க்
> கடல்நின்றும் எடுத்தே
>
> ஊற்றமிக அருள்புரிதல் ஏதுவாக
> உரைசெய்வர் . . . ."
> —சிவப்பிரகாசம், 18.

எனக் குறிப்பிட்டருளி யிருக்கின்றார். இங்ஙனம் இறைவன் முத்தொழில் இயற்றுதல் திருவிளையாட்டின் பொருட்டே என்னும் கொள்கையினை முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவேனும் இவர்

கள் தழுவி உடன்பட்டுக்கொள்ள நேர்ந்தமை,

> "ஆர்த்த பிறவித்
> துயர்கெடநாம் ஆர்த்தாடும்
> தீர்த்தன்நற் றில்லைச்சிற்
> றம்பலத்தே தீயாடும்
> கூத்தன்இவ் வானும்
> குவலயமும் எல்லாமும்
> காத்தும் படைத்தும்
> கரந்தும் விளையாடி . ."

எனவும்,

> "ஐயாநீ ஆட்கொண்
> டருளும் விளையாட்டின்
> உய்வார்கள் உய்யும்வகை
> எல்லாம் உய்ந்தொழிந்தோம்

எனவும் திருவெம்பாவைப் பாடல்களில் (*11, 12*), மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தலை நினைவு கூர்ந்தே யாம் எனத் துணிந்து கூறலாம், இவ்வாற்றால் சைவசித்தாந்தச் சான்றோர்கள் ஆகிய அவ்விருபெருமக்களும், திருவெம்பாவை ஆகிய அரியநற் கவிதையினைப் பெரிதும் போற்றி யிருத்தல், உணர்ந்து இன்புறுதற்கு உரியது.

**சிவஞான சுவாமிகள் :**

அற்றேல் முற்கூறிய குற்றம் என்னுவது? எனின், "ஈண்டு விளையாட்டு என்றது ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு என்புழிப்போல, அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை குறித்தே யாகலின், அதனை இளஞ்சிறுர்களின் செயலோடு ஒக்கும் என்றல் பொருந்தாது" எனச் சிவஞான போதப் பேருரையில், சிவஞானசுவாமிகள் அமைவுரை கூறியருள்கின்றுர்கள்.

**கம்ப நாடர் :**

கல்வியிற் பெரியவர் என்று புகழ் பெற்றவரும், கவிஞர் பெருமக்களில் தலைசிறந்தவரும் ஆகிய **கம்பர்** தாமும், இக் கருத்தினையே உட்கொண்டவராகப் பாடியிருக்கும் இனிய பாடலும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

> உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
> நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகி லாவிளை யாட்டுஉடை யார்அவர்
> தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

**ஒரு தோழம் தொண்டர் :**

திருவெம்பாவையிற் போதரும் அரிய பல இனிய சொற்றொடர்களை மேலே கண்டோம். அவைகளுள் "ஓத வுலவா ஒரு தோழம் தொண்டருளன்" என்பதும் ஒன்று. இதன்கண் பயின்று வரும் "தோழம்" என்னும் சொல்லின் பொருளை உன்னித்து உணரானமயால், திருவாசகப் பதிப்புக்கள் பலவற்றில் "ஓத வுலவா ஒரு **தோழன்** தொண்டருளன்" என்றே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மேலும், தாம் கொண்ட இப் பிழைபட்ட பாடத்திற்கு ஒரு சிலர், "தோழன்" என்னும் சொல் ஈண்டுச் **சுந்தரமூர்த்தி** சுவாமிகளையே குறிக்கின்றது எனவும் விபரீதப் பொருள் கண்டனர். அதனைப் பற்றுக்கோடு ஆகக் கொண்டு மற்றுஞ் சிலர், இவ்வாற்றால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகர்க்குக் காலத்தால் முற்பட்டவர் என்றும் ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டு விட்டனர்.

எண்ணில்லாத பல கோடிகளைக் குறிக்கும் ஒரு பேரெண் **தோழம்** எனப்படும். "ஓத வுலவா ஒரு தோழம் தொண்டருளன்" என்னும் திருவெம்பாவைத் தொடருக்குச் 'சொல்ல முடியாத - ஓப்பற்ற - கோடிக்கணக்கான தொண்டர்களை யுடையவன்' என்பது பொருள். 'உளன்' என்பதற்கு 'உள்ளங்களில் எழுந்தருளி யிருப்பவன்' எனவும் பொருள் கூறலாம்.

**திருஞானசம்பந்தர் :**

மாணிக்கவாசகர் வழங்கியருளிய **தோழம்** என்னும் இவ்வரிய சொல்லானது, திருஞானசம்பந்தப் பெருமானும்

தம்முடைய தேவாரப்பாடல் ஒன்றிலும் வழங்கப்பெற்றுள்ளது. "உண்ணுதற்கு அரிய ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினையுண்டு, கோடிக்கணக்கான தேவர்களை இறவாமற் காத்து, விண்ணுலகத்திற் பொலிவுடன் வாழ வைத்தருளியவன் சிவபெருமான்" என்னும் கருத்தமைய,

"உண்ணற் கரிய நஞ்சையுண்டு
ஒரு தோழம் தேவர்
விண்ணிற் பொலிய அமுதம்அளித்த
விடைசேர் கொடிஅண்ணல்"

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். **பரிபாடல்** என்னும் சங்க நூலிலும், ஆதிசேடனின் சிறப்பினைக் கூறுவதாக வரும் பாடற்பகுதி ஒன்றில், "உகாஅ வலியின் ஒரு **தோழம்** காலம் அறாது அணிந்தாரும் தாம்" என இச்சொல் இனிது ஆளப்பட்டிருக்கின்றது.

**திரோதான சக்தி :**

சைவசித்தாந்த நூல்களில், திரோதான சக்தி என்பது பற்றி ஆங்காங்கே பேசப்படும். **திரோதான சக்தி** என்பது, உயிர்களைப் பற்றிநிற்கும் மும்மலங்களும் தத்தம் தொழில்களைச் செய்யுமாறு ஏவி இயக்குவது; உயிர்கள் உலகநுகர்ச்சியில் ஈடுபட்டுத் தம்வினைப் பயன்களை நுகர்ந்து தீர்த்தற் பொருட்டு, உலகியல் வாழ்வில் நன்மை தீமைகள் ஆகியவற்றை, உயிர்கள் உணராதபடி மறைப்பது.

"ஏயும்மும் மலங்கள் தத்தம்
தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனதோர் சக்தி
திரோதான கரியது ...."

—சித்தியார், 87.

இங்ஙனம் மலங்களைத் தொழிற்பட ஏவி இயக்கி உயிர்களுக்கு மறைப்பினை விளைவிக்கும் திரோதான சக்தியே, பின்னர் உயிர்களுக்கு மலபரிபாகம் வந்த பின்னர் அநுக்கிரக சக்தியாக மாறி நின்று எல்லா நலங்களையும் விளைவிக்கும். சேயின் குற்றம் கண்டு சினந்து கடிந்தொறுக்கும் தாயே, பின்னர் அதன் நற்றம் கண்டு உவந்து அன்புசெய்து நலம்புரிதல் போல்வது, இஃது!

**பேதித்து வளர்த்த பெய்வளை :**

இங்ஙனம் இறைவனின் திருவருள் ஆகிய அம்மையே, முதற்கண் திரோதான சக்தியாக இருந்து பின்னர் அநுக்கிரக சக்தியாக மாறி நலம் விளைத்தலைச் சைவசித்தாந்த நூல்கள் கூறும்.

"பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்" (20)

"முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று" (32)

"முற்சினம்மருவு திரோதாயி கருணையாகித்
திருந்தியசத் திபாதம் திகழும் அன்றே" (48)

என்பன சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூற்செய்யுட்கள். முதலில் சினம் மருவித் திரோதான சக்தியாக இருப்பதே, பின்னர் அந்நிலையின் வேறுபட்டு அநுக்கிரக சத்தியாக மாறி நிற்கும் இயல்பினையே,

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த
பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர்
எம்பாவாய்

என்னும் திருவெம்பாவைச் செய்யுள் (14), தெள்ளிதின் விளக்குகின்றது. இச்செய்யுளைப் பின்பற்றியே, மேற்குறித்த சிவப்பிரகாசச் செய்யுட்கள் எழுந்தன எனலாம்.

**ஐந்தொழிற் றிறம் :**

கடவுட் கொள்கை யுடைய எல்லாச் சமயங்களும் பொதுவாக, உலகைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களையே இறைவன் செய்வதாகக் கூறும். ஆனால் சைவ சித்தாந்தமோ, இறைவன் ஐந்து தொழில்கள்

இயற்றுவதாக அறுதியிட்டுக் கூறும் **ஐந்து** தொழில்களாவன, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. இவற்றை முறையே சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபவம் அநுக்கிரகம் என்றும் கூறுவர்.

**சைவ சித்தாந்தம் :**

உலகமானது அசேதனம் (அறிவில்லது), சேதனம் (அறிவுடையது) என இருதிறப்படும். பிற சமயங்கள் கூறும் முத்தொழில்களும் அசேதனப் பொருள்களுக்கு மட்டுமே பொருந்தும். சேதனப் பொருள்களாகிய உயிர்களுக்கு அவை பொருந்தா. ஏனெனின், இறைவன் உயிர்களைப் படைப்பதும் இல்லை; அழிப்பதும் இல்லை. உயிர்கள் "எண்ணரிதாய் **நித்தமாய்**" இருப்பன. "பதியினைப் போற்பசு பாசம் **அநாதி**" என்பது திருமூலர் திருமந்திரம். எனவே இறைவன் உயிர்களைப் படைப்பதும் இல்லை, அழிப்பதும் இல்லை. ஆதலின் படைத்தல் காத்தல் அழித்தல் என்பன, அசேதனப் பொருள்களுக்கு மட்டுமே பொருந்தும். எனவே உயிர்களாகிய சேதனப் பொருள்களின் பொருட்டு, இறைவன் மறைத்தல் அருளல் ஆகிய இருதொழில்களைச் சிறப்பு முறையிற் செய்வதாகக் கூறி, இறைவனுக்கு ஐந்து தொழில்கள் உரியன என்று சைவசித்தாந்தம் சாற்றும், (சித்தியார், 57—சிவப்பிரகாசம் 18).

அற்றேல் முன்பு மூன்று தொழில்களே கூறி ஈண்டு ஐந்து தொழில்கள் என்றல் முரண் அன்றோ எனின், அன்று. ஏதேனும் ஒன்றனைக்கூறுங்கால் **தொகை வகை விரி** என மூவகை நெறியாற் கூறலாம். முத்தொழில் என்றது வகை. அதுவே தொகையாயின் பந்தம் வீடு என இரண்டாகவும், விரியாயின் மறைத்தல் அருளல் என்பனவற்றோடு சேர்த்து ஐந்தாகவும் கூறப்படும்.

**மதுரைச் சிவப்பிரகாசர் :**

இங்ஙனம் சைவசித்தாந்த நூல்கள் இறைவனின் ஐந்தொழிற்றிறம் குறித்து விளக்குதற்கு உரிய அரிய சான்றாக அமைந்தது திருவெம்பாவையே ஆகும். மதுரைச் **சிவப்பிரகாசர்** என்னும் சைவசித்தாந்தச் சான்றோர், தாம் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூற்கு வகுத்தருளிய மிக விரிவான பேருரையின்கண், இறைவனின் ஐந்தொழிற்றிறம் பற்றி விளக்குதற்குத் திருவெம்பாவையின் இறுதிச் செய்யுளையே, சிறந்த மேற்கோளாக எடுத்துக் காட்டியருள்கின்றார்.

"போற்றி எல்லா உயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்

போற்றி எல்லா உயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்

போற்றி எல்லா உயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்

போற்றி மால் நான்முகனும்
காணாத புண்டரிகம்

போற்றியாம் உய்ய ஆட்கொண்டு
அருளும் பொன்மலர்கள்"

என வரும் ஐந்து வரிகளும் முறையே, இறைவனின் ஐந்தொழிற்றிறம் பற்றி விளக்குவனவாக அவர், அழகுறக் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை :**

இவ்வாறு எத்துணையோ பற்பல சான்றோர்கள் ஆகிய நம் முன்னைப் பெரியவர்கள், போற்றி மகிழ்ந்து பயன்கொண்ட **நற் கவிதை**யாகிய திருவெம்பாவையினை, நம் மனோர் அனைவரும் நன்கினிது ஓதி உய்ந்து நலம் பெறுவோமாக!

[நமது தமிழக முதலமைச்சர் பெருந்தகை அவர்கள் கலந்து கொண்ட பாவை மாநாட்டில், பொன் விளைந்த களத்தூரிற் பேசியது. (13-1-65)
—ஆசிரியர்]

"மும்மைத் தமிழ்க்கூடல் மூலலிங்கத் தங்கயற்கண்
அம்மைக் கமுதாம் அருமருந்தை,—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கு,ஒயிற் காணலாம் கண்டீர்! நம்
உள்ளத் திருக்கோயில் உள்"

—(குமர குருபரர்)

# "வைத்தியநாதன்"

**முன்னுரை :**

இறைவனைச் சில சமயங்கள் தாயாக வைத்து வணங்குகின்றன. மற்றும் சில சமயங்கள் தந்தையாகக் கருதிப் போற்றுகின்றன;

" அன்னே அனேஎனும் சிலசமயம் ;
நின்னையே ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்."

எனத் தாயுமான சுவாமிகள், கடவுளைத் தந்தையின் நிலையில் வைத்துச் சில சமயங்களும், தாயின் நிலையில் வைத்துச் சில சமயங்களும், போற்றி வழிபட்டு வருதலைக் குறிப்பிடுகின்றார்.

**எகிப்து :**

நாகரிக மேம்பாட்டில் மிகவும் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த **எகிப்து** நாட்டு மக்கள், முழுமுதற் கடவுளை ஓஸைரிஸ் (Osiris) எனத் தந்தையாகவும், ஐஸிஸ் (Isis) எனத் தாயாகவும் வைத்து வழிபட்டு வந்தனர்.

**பாபிலோனியா ;**

எகிப்து நாட்டு மக்களைப் போலவே நாகரிகச் சிறப்புடன் திகழ்ந்திருந்த **பாபிலோனிய** நாட்டு மக்கள், எல்லாம் வல்ல இறைவனை ஏ (Ea) எனத் தந்தையாகவும், தவ்கிநா (Davkina) எனத் தாயாகவும் கருதி போற்றி வணங்கி மகிழ்ந்தனர்.

**சாலடியா :**

**சாலடியர்** என்னும் பழம்பெரும் நாகரிக மக்கட் டொகுதியினரும், **ஊர்** (Ur) என்னும் தம்முடைய தலைநகரில் தாம் எழுப்பிய மாபெருங் கோயிலின் கண் ஒளிவடிவாக விளங்கும் கடவுளை ஸமஸ் (Samas) எனப் பெயரிய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) எனப் பெயரிய அன்னையாகவும் அமைத்து வழிபாடு செய்து போந்தனர்.

**அர்த்தநாரீசுவரர் ;**

இங்ஙனம் கடவுள் தாயும் தந்தையுமாக ஒருசேர இருந்து நம்மனோர்க்கு அருள்புரிந்து வரும் உண்மையினையே, நம் தமிழ் நாட்டிற் சிறப்பாகப் போற்றப்பெறும் **அர்த்தநாரீசுவர மூர்த்தம்,** இலட்சுமி நாராயண மூர்த்தம் முதலியனவும் இனிது உணர்த்துகின்றன.

**பல நிலைகள் :**

இவ்வாறே இறைவனை இணையற்ற ஒரு பெருந் **தலைவன்** என்றும், ஒப்புயர்வற்ற ஒரு **பேரரசன்** என்றும், மாபெரும் **யோகி** என்றும், சிறந்த நல்ல **ஞானாசிரியன்** என்றும் பிறவாறும், பற்பல நிலைகளில் பலப்பல சமயங்களும் போற்றி வருதலைக் காண்கின்றோம்

**தந்தை தாய் :**

இறைவனின் இப்பலவகை நிலைகளையும் பற்றிச் சிவஞான சித்தியார் நூலில், ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் ஆங்காங்கே அழகுறக் குறிப்பிட்டருள்கின்றார். இறைவன் தாயும் தந்தையுமாகிய நிலையில் இருந்து வருதலை,

"தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடர் விடின், உறுக்கி
வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் ; எல்லாம்
பார்த்திடிற் பரிவே. யாகும் ;
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனர் முனிவும் என்றும் !" —106

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் சிறந்தெடுத்து விளக்குதல் காணலாம்.

**தலைவன் அரசன் :**

இவ்வாறே இறைவன் அரசர்க்கு அரசாய பேரரசனும் பெருந்தலைவனுமாகப் பிறங்கிக் கொடியோர்த் தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்தலும் ஆகிய செயல்களைப் புரிந்து வருதல், பின்வரும் சித்தியார் செய்யுட்களால் தெளியப்படும்.

*மறைகள் ஈசன்சொல் ; அச்சொல்*
*வழிவரா உயிரை வைக்கும்*
*சிறைகள் மாநிரயம் ; இட்ட*
*பணிசெய்வோர் செல்வத் தோடும்*
*உறையும்மா பதிகள், உம்பர்*
*உலகங்கள் ; யோனிக் கெல்லாம்*
*இறைவன் ஆணையினல் இன்ப*
*துன்பங்கள் இயைவ தாகும் !* —120

*அரசனும் செய்வது ஈசன்*
*அருள்வழி ; அரும்பா வங்கள்*
*தரையுளோர் செய்யின், தீய*
*தண்டலில் வைத்துத் தண்டத்*
*துரைசெய்து தீர்ப்பான் ; பின்பு*
*சொல்வழி நடப்பர் தூயோர் ;*
*நிரயமும் சேரார் ; அந்த*
*நிரயமும் நீர்மை ஈதாம் !* —122

**யோக-ஞான-ஆசிரியன் :**

இறைவன் யோகிகளுக் கெல்லாம் சிறந்த யோகியாய், பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் எனவும், புண்ணியன் எனவும் போற்றப்படும் நிலைமை,

*"யோகியாய் யோக முத்தி*
*உதவுதல் அதுவும் ஓரார் !"* (70)
*"கண்ணுதல் யோகு இருப்பக்*
*காமன் நின்றிட வேட்கைக்கு*
*விண்ணுறு தேவர் ஆதி*
*மெலிந்தமை ஓரார்".* (72)

எனவரும் செய்யுட்களில், அருள்நந்தி சிவாசாரியர் அவர்களால் அழகுற விளக்கப் பெற்றிருத்தல் காணலாம். இறைவனே ஞானசிரிய நிலையினனாக இலங்கிப் போதரும் தன்மையினைச் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களின் எட்டாம் சூத்திரம் இனிது விளக்குதலை, யாவரும் அறிவர்.

**வைத்தியநாதன் :**

இங்ஙனம் பலநிலைகளில் இறைவன் இலங்குவதும், இறைவனை மக்கள் வழிபட்டு வருவதும் போலவே, இறைவனை ஒரு பெரும் **மருத்துவன்** எனவும் நூல்கள் கூறுகின்றன. இருக்குவேதத்தில் உருத்திரன் எனப்படும் சிவபெருமான், வைத்தியநாதன் என ஆங்காங்கே குறிக்கப்பட்டிருக்கும் பகுதிகள் பலவற்றையும், வேதங்களை நன்கு ஆராய்ந்து பதிப்பித்துள்ள மேலைநாட்டுப் பேரறிஞர்கள் தொகுத்துக் காட்டியிருக்கின்றார்கள் (1).

**சித்தியார் :**

இருக்குவேதமானது எல்லாம் வல்ல சிவபிரானை "வைத்தியநாதன்" என்று ஆங்காங்கே பல இடங்களிலும் குறிப்பிடுதலை நன்கினிதுணர்ந்த "சகலாகம பண்டிதர்" ஆகிய அருள்நந்தி சிவாசாரியர், அத்திறம் பற்றியும் தம்முடைய சிவஞான சித்தியார் நூலில் சிறந்தெடுத்துத் தெருட்டி யருள்கின்றார்.

*மருத்துவன் உரைத்த நூலின்*
*வழிவரிற் பிணிகள் வாரா ;*
*வருத்திடும் பிணிகள் தப்பில் ;*
*தப்பிய வழியும் செய்யத்*

---

(1) "The character ascribed to **Rudra** in the hymns of the **Rig Veda** are most heterogeneous and frequently indefinite. ......Rudra is frequently described as the possessor of healing remedies, and is characterized as the greatest of **physicians**.

[I. 43-44; I. 144-145; II. 33, 2, 4, 7, 12, 13; V. 42, 11; VI. 74, 3; VII. 46, 3; VII. 29. 5.]

— Dr. Muir, Sanskrit Texts.

திருத்துவன் ; மருந்து செய்யாது
உறும்பிணி சென்றும் தீர்ப்பன் ;
உரைத்த நூற் சிவனும் இன்னே
உறுங்கன்மம் ஊட்டித் தீர்ப்பன்". (124)

மண்ணுளே சிலவி யாதி
மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும் ; சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன் ;
அண்ணலும் இன்ப துன்பம்
அருத்தியே வினைஅறுப்பன்." (125)

அருளினல் உரைத்த நூலின்
வழிவராது அதன்மம் செய்யின்
இருளுலாம் நிரயத் துன்பத்து
இட்டு, இரும் பாவம் தீர்ப்பன் ;
பொருளுலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தாற் புணியம் தீர்ப்பன் ;
மருளுலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்து இவை; வைத்தியன் நாதன். (123)

இவ்வரிய இனிய பாடல்கள் இறைவன் ''வைத்திய நாதன்'' என விளங்குதலை, எத்துணைப் பொருத்தமுறக் குறிப்பிட்டுள்ளன என்பது, பலகாலும் நுண்ணிதின் எண்ணிச் சுவைத்து மகிழத் தகுவது

**குமரகுருபரர் :**

இங்ஙனம் சிவபெருமான் மருத்துவனுகவும், மருத்துவர்களின் தலைவனுகவும், "வைத்திய நாதன்'' என்னும் நிலையில், **திருப்புள்ளிருக்கு வேளூர்** என்னும் தலத்திற் சிறப்புற எழுந்தருளி விளங்குகின்ருன். செந்தமிழ்ச் சிவநெறிச் சான்ருேர் செம்மல் ஆகிய குமரகுருபரசுவாமிக்ள், புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை **வைத்தியக் கடவுள்** எனவும், **வைத்திய நாதன்** எனவும் புகழ்ந்து போற்றிப் பின்வரும் பாடல்களில் துதித்து மகிழ்கின்ருர்.

"மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு, வாணிக்கு நான்மறை
முதலி செங்நாத் தடம், தையலாளொடு
வயித்தியக் கடவுளார்க்கு
மெய்விரிக்கும் தொண்டர் உளத்தினெடு
வேதச் சிரம் போல......" (363)

"சூக்கும வெளியினிற்
பரம நடம் நவிற்றுதிறல் வேளூர்
வயித்திய நாதனைப் போற்றுதும்." (351)

**தீராநோய் தீர்ப்பான் :**

புள்ளிருக்கு வேளூர்ப் பெருமான் வைத்திய நாதன் என விளங்கி, வழிபடும் அடியவர்களுக்குத் தீராநோய்களை எல்லாம் தீர்த்தருளி வருகின்ருன். வைத்தியர்கள் மணி மந்திரம் மருந்து என்னும் மூன்று பொருள்களைக் கொண்டு நோய்களைத் தீர்ப்பர். சிவபெருமானும் உருத்திராக்கம் ஆகிய **மணியும்**, திருவைந்தெழுத்து ஆகிய **மந்திரமும்**, திருநீறு ஆகிய **மருந்தும்** கொண்டு, நம்மனேரின் உடற்பிணி உயிர்ப்பிணிகளைத் தீர்த்து அருள்புரிகின்ருன். ''பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான் ; மந்திரமும் தந்திரமும் மருந்தும் **ஆகித் தீராநோய் தீர்த்தருள்வான்**" வேளூர்ப் பெருமான் என்பது, திருநாவுக்கரசர் தேவாரம்.

**நம்பிக்கை :**

இறைவனை நம்பி அன்புடன் வணங்கி வழிபட்டால், நாம் நோய்கள் தீர்ந்து நலம் பெற்று வாழ்தல் திண்ணம். சமயவாழ்விலும் உலகியல் வாழ்விலும் **நம்பிக்கை** என்பது மிகவும் இன்றியமையாதது; அளவிலா ஆற்றல் வாய்ந்தது. மேலைநாடுகளில் 'நம்பிக்கை மருத்துவ முறை' (Faith-Healing) பெரிதும் பரவி வருகின்றது.

பேராசிரியர் **கார்ல் கஸ்டாவ் ஜங்** என்பவர், "கடந்த 30 ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்

வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில்—அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல்—தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை.

அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவு ஆகிய உணர்ச்சியைப் பெறுமல், அவர்கள் இழந்து விட்டமையே யாகும்.

மீண்டும் சமயவுணர்வு கைவரப் பெறுமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணி தீர்ப்பெற்றிலர்" என வலியுறுத்திக் கூறுகின்ருர் (2).

**முடிவுரை :**

எனவே, நாம் அனைவரும் புள்ளிருக்கு வேளூர் வைத்தியநாதப் பெருமானை, அன்புடனும் நம்பிக்கையுடனும் வழிபட்டு வணங்கி, இம்மை மறுமை நலன்களை யெல்லாம் பெற்று உய்வோமாக!

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது,
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ?
பரத்துறை சீலத் தவர் வாழ்வே!
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே!
வரத்துறை நீதர்க் கொருசேயே!
வயித்திய நாதப் பெருமாளே!

— திருப்புகழ் —

[ திருப்புள்ளிருக்கு வேளூர்க் கிருத்திகைப் பிரசாத விழாவில், **திரு. K. பாலசுப்பிரமணிய ஐயர்,** B.A., B.L., M.L.C., அவர்கள் தலைமையில், சென்னைத் தருமையாதின சமயப் பிரசார நிலையத்திற் பேசியது. — ஆசிரியர்.]

(2) "During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me......

Among all my patients in the second half of life—that is to say, over thirty-five years—there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life.

It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook."

—**Prof. Carl Gustav Jung.**

Quoted by **Dr. S. Radhakrishnan**, in his "Recovery of Faith" p. 37.

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காஞ்சிபுரம் : | கயிலாசநாதர் கோயில் மகாசிவராத்திரி விழா. |
| கும்பகோணம் : | ஆதிகும்பேசுவரர் கோயில் மாசிமகவிழா. |
| திருத்தணிகை : | பிரம்மோற்சவம். |
| திருவாலங்காடு : | ,, ,, |
| திருநெல்வாயில்: | அரத்துறை, மாசிமகப்பெருவிழா. |
| திருக்கண்ணபுரம் : | ,, ,, |
| திருமழபாடி : | ,, ,, |
| தென்காசி : | விசுவநாதர் கோயில் மாசிமகப் பெருவிழா. |
| பாண்டமங்கலம் : | (சேலம்) பிரம்மோற்சவம். |
| போடிநாயக்கனூர் : | மகாகும்பாபிஷேகம். |
| சீர்காழி : | ஸ்ரீ தாடாளன் கோயில், மகாசம்ப்ரோட்சணம். |
| திருவாஞ்சியம் : | மாசிப் பெருந்திருவிழா. |
| காரமடை : | திருத்தேர் விழா. |

# "திருவளர் தாமரை"

**முன்னுரை :**

மாணிக்கவாசகர் அருளிச்செய்த நூல், **திருவாசகம்** என்பதனை யாவரும் அறிவர். அவரே **திருச்சிற்றம்பலக்கோவையார்** என்னும் பிறிதொரு சிறந்த அருள் நூலையும் இயற்றியுள்ளார். இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப் பெற்றிருக்கின்றன. எனினும் அவைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, திருச்சிற்றம்பலக்கோவையார் ஒன்றே யாகும். இதனைத் **'திருக்கோவையார்'** எனவும் சுருக்கமாக அறிஞர்கள் வழங்குவர்.

திருக்கோவையார்தான், இன்றுள்ள எல்லாக் கோவை நூல்களுக்கும் முதன் முதலில் தோன்றியது; பிறவற்றிற்கெல்லாம் அதுவே அடிப்படையும், வழிகாட்டியும், மேல்வரிச்சட்டமும் (Model) ஆக அமைந்தது! கோவை நூல்களின் வரிசையில், பழமையும் பெருமையும் மிக்க அருமைப்பாடு உடையதாய், ஈடும் எடுப்பும் அற்று விளங்குவது 'திருக்கோவையார்' என்பதனை, அறிஞர்கள் அனைவரும் இனிது உடன்பட்டுப்போற்றி மகிழ்வர்.

**சிறப்பிலக்கியம் :**

''உலகியற்கைப் பொருள்களில் **பரிணமக் கொள்கை**யின்படி, முதன்முதலாகத் தோன்றிய பொருள்களைவிட, நாளடைவாகப் படிப்படியே தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து, வளர்ச்சியுற்றுச் சிறந்து திகழக் காண்கின்றோம். ஆனால் இப் பரிணமக் கொள்கையானது, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம் திடுமெனத் தாமே முதன்முதலாகத் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச் சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற் கூட, அவற்றிற்குப் பின்னர்ப் படிப்படியே காலப்போக்கில் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை'' என **டாக்டர் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் (1)** என்னும் புகழ்பெற்ற அமெரிக்க நாட்டுப் பேரறிஞர், தம்முடைய இலக்கியத் திறனாய்வின்கண் குறிப்பிடுகின்றார். அது, நம்முடைய திருக்கோவையார்க்கு மிகமிகப் பொருந்திய தொன்றாகக் காணப்படுகின்றது.

**ஞானப் பனுவல் :**

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பலவகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் மிகவும் தலையாயது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி, அழியா இன்ப அருங்கலைக் கவிதைப் படைப்பாகக் கவின்மிக்குத் திகழ்தலே யாகும்.

திருக்கோவையார் நூலை அந்தணர்கள் **வேதம்** எனவும், யோகியர்கள் **ஆகமம்** எனவும், காமுகர்கள் **காமநூல்** எனவும், தருக்க நூல் வல்லவர்கள் **ஏரணம்** எனவும், புலவர் பெருமக்கள் சிறந்த **இலக்கியம்** எனவும் பலப்பல வகைகளில் வியந்து போற்றுவர்.

---

"Here is a very old thing. In literature **the best** in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of **evolution** over-simply. But I think, it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature, **the masterpiece** is unprecedented, unique, never challenged or approached henceforth". —Dr. I. A. Richards.

இந்நூலுக்கு இணையற்ற இனிய உரையினை வகுத்தருளிய **பேராசிரியர்**, இதன்கண் அறிவன் நூற்பொருளும், உலகியல் வழக்கும் ஆகிய இருதிற நலங்களும் இயைந்து விளங்குகின்றன எனக் குறிப்பிடுகின்றார். இவ்வியல்பினைச் செவ்விதின் ஆய்ந்துணர்ந்த **குமரகுருபர சுவாமிகள்,** தாம் இயற்றியருளிய சிதம்பர மும்மணிக் கோவையின்கண், இதனை **"ஞானப் பனுவல்"** என நயந்து வியந்து போற்றுகின்றார். இத்தகைய சிறந்த ஞானப்பனுவலின் முதற் செய்யுளையும், அதன் பொருள் நலங்களையும், ஈண்டுக் காண்போம்!

" திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர்தில்லைக்

குருவளர் பூங்குமிழ் கோங்கு,பைங்
காந்தள்கொண்டு, ஓங்குதெய்வ

மருவளர் மாலை, ஓர் வல்லியின்
ஒல்கி, அனநடை வாய்ந்து

உருவளர் காமன்றன் வென்றிக்கொடி
போன்று ஒளிர்கின்றதே. "

இப்பாடல், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களில் இன்பத்தைப் பற்றிக் கூறுதலை மேற்கொண்டு, **அகப்பொருள்** நூல்களிற் **களவியல்** எனப்படும் பகுதிக்கு உறுப்பாகிய **கைக்கிளைத்திணை**யின்கண், **காட்சி** என்னும் துறையினைச் சேர்ந்ததாகும். அஃதாவது, ஒப்புயர்வற்றுச் சிறந்த அழகிய ஒரு தலைமகளை, இறைவன் திருவருள் துணைநின்று தலைமகன் ஒருவன் காணுமாறு செய்ய, அவன் அவள் அழகைக் கண்டு வியந்து மகிழ்ந்து புகழ்ந்து கூறுவதுபோல அமைவது. இப்பாடலின் பொருள் வருமாறு :—

*திருவளரும் தாமரைப் பூவினையும், அழகு வளரும் நீலப் பூக்களையும், இறைவனது தில்லை வரைப்பின்கண் உண்டாகிய பூங்குமிழினது நிறம் வளரும் பூவினையும், கோங்கின் அரும்புகளையும், செவ்விய காந்தட் பூக்களையும் உறுப்பாகக்கொண்டு, மேம்பட்ட தெய்வமணம் வளரும் மாலையானது, ஒரு வல்லியைப் போல நுடங்கி, அன்னத்தின் நடையினைப் போல நடைவாய்ந்து, அழகு வளரும் காமனது வெற்றிக்கொடியைப் போன்று விளங்குகின்றது. இஃது என்ன வியப்பு!*

இப்பாடலின்கண் தான் கண்ட தலைமகளின் முகத்தைத் தாமரை மலராகவும், கண்களை நீலப் பூக்களாகவும், மூக்கினைக் குமிழம்பூவாகவும், தனங்களைக் கோங்கின் அரும்புகளாகவும் தலைமகன் வியந்து பாராட்டுகின்றான்.

இங்ஙனம் தன்னுடைய ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு மலருக்கு நிகராக விளங்க, இணையற்ற பேரெழிலும் இனிய நறுமணமும் வாய்ந்து, அத் தலைமகள் விளங்கியதனால், அத்தலைமகளைத் தெய்வத்தன்மை மிக்கு நறுமணம் கமழ்கின்ற ஒப்பற்றதொரு மாலையாக உருவகம் செய்து, **" ஓங்கு தெய்வ மருவளர் மாலை "** எனத் தலைவன் புகழ்ந்து கூறி மகிழ்ந்து நிற்கின்றான்.

அவளுடைய மெல்லியல்பும் நடையழகும் கண்டு **" வல்லியின் ஒல்கி, அன்ன நடை வாய்ந்து "** என்றும்; முதன் முதலாகக் கண்ட அளவிலேயே, தான் அவள்பால் தன் உள்ளத்தை இழந்து தோல்வியுற்றுக் காதல்வயப்பட்டு நின்றனன் ஆகலின், அவளை மன்மதனின் வெற்றிக் கொடி போல்பவள் என நன்கு மதித்து " உருவளர் காமன்றன் வென்றிக் கொடி " என்றும், நலம் புனைந்துரைக்கின்றான் தலைமகன்.

இப் பாடலின்கண் அமைந்துள்ள நுட்பப் பொருள்கள் பலவற்றையும், இதற்கு உரை வகுத்துள்ள பேராசிரியர் துணைகொண்டு, ஈண்டு இயன்ற அளவு காண்போம்;

(1) **திரு :** கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். 'திருவளர் தாமரை' என்னும் தொடருக்கு 'அழகு வளரும் தாமரை' என்றேயல்லாமல் 'திருமகள் தங்கும் தாமரை' எனவும் பொருள் கொள்ளலாம்.

(2) **திரு** என்பது, யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ, அக் கண்டவற்கு அப்பொருள்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. அதனால் ' திரு ' என்றது அழகுக்கே பெயர் ஆகும்,

(3) தான் கண்ட வடிவின் பெருமையைப் புகழ்கின்றான் ஆகலின், ஒருத்தி இருந்த தவிசை இவளுக்கு புகமாகக் கூறுதல் வழுவாம்; அதனால் ' திருமகள் தங்கும் தாமரை ' எனப்பொருள் கொள்ளுதல் ஈண்டுப் பொருந்தாது.

(4) இனி, எல்லோரும் விரும்பிப் புகழும் அழகையுடைய திருமகள் தானும், விரும்பித் தங்கியிருக்கும் சிறப்பை யுடையதாகலின், தாமரைக்கு ஒத்ததும் மிக்கதும் இல்லை. எனவே, திருமகளாலே தாமரை உயர்ந்திலது; தாமரையின் உயர்ச்சி கண்டு திருமகள் அதன்கண் தங்கி வதியலுற்றாள் எனக் கொள்க. இங்ஙனம் கொள்ளின், ' திருமகள் தங்கும் தாமரை ' எனப் பொருள் கொள்ளினும் ஒருவகையில் அமையும்.

(5) ' **வளர்** ' என்னும் சொல்லுக்கு ' **வளரும்** ' என உம்மை கொடுத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், **வளர்ந்த** எனக் கொள்ளின், இப்பொழுது இல்லதாய் முன்பே முடிந்து கழிந்ததனைக் கூறியவாறும்; **வளர்கின்ற** என உரைப்பின், முன்னும் பின்னும் இல்லதாய் இடைநடுவே வந்துள்ள தொன்றினைக் குறித்ததாம்; **வளரவுள்ள** எனப் பொருள்சொல்லின், பண்டும் இன்றும் இல்லதாய் இனிமேல் ஒரேவழியே தோன்ற இருப்பதனைச் சுட்டிற்றாம். ஆதலின் முக்காலத்திற்கும் ஒப்பப் பொருந்தும் வண்ணம் " **வளரும்** " என உரைகோடலே சால்புடைத்தாம்,(தொல். சொல். வினை, 43)

(6) " குருவளர் குமிழ் " என்றதே அமையுமாயினும், " **பூங்குமிழ்** " என மேலும் சிறப்பித்துக் கூறியது, முன்னும் பின்னும் வருகின்ற பல பூக்களை நோக்கியும், செய்யுளின்பம் நோக்கியும், அதற்கு ஆகுபெயரை நோக்கியும் ஆகும்.

(7) திருவளர் தாமரை-சீர்வளர் காவிகள் -குருவளர் பூங்குமிழ் என்று ஏனையவற்றிற்கெல்லாம் அடைமொழி கொடுத்தார். ஆனால் **கோங்கு** என்பதற்கு மட்டும் அடைமொழி கொடுத்திலர். ' கோங்கு ' என்பது பாலைநிலத்திற்கு உரிய கருப்பொருள். பாலைநிலத்திற்கெனத் தனியே நிலம் கிடையாது என்பது தமிழிலக்கணம். ஆதலின் அக் குறிப்பை உணர்த்துதற் பொருட்டு, மணிவாசகர் பாலைநிலத்திற்குரிய கருப்பொருள் ஆகிய கோங்கிற்கு அடைமொழி ஏதும் கொடுக்காமலே குறிப்பிட்டார்;

(8) கருப்பொருட்டிறம் குறித்து அடைகொடாராயினும்,கோங்கு என்பது ஈண்டுத் தலைமகளின் தனங்களுக்கு உவமையாக வந்ததாகலின், அத்திறம் கருதியேனும் அதற்கு அடைமொழி புணர்த்துக் கூறியிருத்தல் வேண்டுமென்றோ? எனின், அடைகொடுப்பின் பிறவுறுப்புக்களுடன் தனங்களையும் சமமாக வைத்துக் கூறியதாக முடியும். ஆதலின் அடைகொடாமையே, தனங்களின் தனிச்சிறப்பினை விளக்கி நிற்கும். அஃது எதுபோல எனின், திருக்கோயில் - திருவாயில் - திருவலகு எனச் சிறப்பித்துக் கூறி, இறைவனை மட்டும் **திருநாயனார்** என்னாமல், **நாயனார்** என்றே அடைமொழி கொடாது வழங்குதல் போலும் என்பது!

(9) மணிவாசகர் அருட்பொருளை அகப்பொருளின்கண் இயைத்து, இந்நூலிற் கூறத் தலைப்படுகின்றார் ஆகலின், அகத்தமிழின் பொருளுக்குரிய ஐந்திணைகளையும் இப்பாடலிற் சுட்டியருள்கின்றார். **தாமரை** மருதமும், **காவி** நெய்தலும், **குமிழ்** முல்லையும், **கோங்கு** பாலையும், **காந்தள்** குறிஞ்சியும் ஆகிய ஐந்து திணைகளையும் குறித்து நிற்றல் கண்டு கொள்க, இங்ஙனம் எல்லாவற்றையும் கூறியது ' நிலமயக்கம் ' எனப்படும்.

(10) இங்ஙனம் நிலமயக்கம் கூறினாராயினும், " பைங்காந்தள் ;" என்று இறுதியிற் குறிஞ்சிக்குரிய பூவிலேயே

முடித்ததனுல், அத்திணைக்குரிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய குறிஞ்சியினையே ஈண்டுச் சிறப்பு முறையிற் கூறினுர்.

(11) அற்றேற் குறிஞ்சியே கூற அமையாதோ? நிலமயக்கம் கூறியது எற்றுக்கு? எனின், ஓரிடத்தொரு கலியாணம் உண்டானுல் எல்லாரிடத்தும் உண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி அக்கலியாணத்தைச் சிறப்பித்தாற்போலப் பல நிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன.

(12) '**உருவளர்** காமன்றன் வென்றிக்கொடி' என்றது, இறைவனின் நுதல் விழிக்குத் தோற்று உருவை இழப்பதன் முன் மடியாத ஆணையனுய் நிறு உயர்த்திய வெற்றிக்கொடியினை. இங்ஙனம் கூறியதனுல், இறவாத இன்ப அன்பினுலே நிகழ்ந்த அகப்பொருள் ஆகிய காமப்பொருளைச் சுட்டியவாறு ஆயிற்று.

(13) யாரும் கேட்போர் இல்லாமலே தன் நெஞ்சத்திற்குச் சொல்லினமையின், **கந்தருவர்** ஒழுக்கத்தையே போன்ற **களவொழுக்கம்** சுட்டப் பெற்றது.

(14) **ஈசர் தில்லை** என்றமையின், வீடுபேற்றின் பயத்ததெனச் சுட்டினுர். நிலமயக்கம் கூறித் தில்லையைச் சிறப்பித்ததனுல், பல நிலங்களினும் சென்று துய்க்கும் இன்பமெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பர் என்பது போதரும். போதரவே இம்மையின்பத்திற்தும், மறுமை யின்பத்திற்கும் தில்லையே காரணம் என்பது கூறியவாருயிற்று.

(15) யாரொருவரையும் கேசாதி பாதம் அல்லது பாதாதி கேசம் ஆக வருணித்தல் வேண்டும். அவற்றுள், இது கேசாதி பாதம் (முடி முதல் அடியிறு) ஆக வருணிக்கப் பெற்றது. என்னை? 'திருவளர் தாமரை' என **முகம்** முதலாக எடுத்துக் கொண்டு 'அன்ன நடை' என்று காலில் முடித்தலான். மனிதரை முடி முதல் அடியிருகவும், கடவுளரை அடிமுதல் முடியிருகவும் வருணித்தல் வேண்டும் என்பது மரபு.

(16) அற்றேல், இதன்கண், 'அன்ன நடை' எனும்படி நடைகண்டான் ஆயின், மேலே அடுத்து ஐயநிலையுணர்த்தல் வழுவாகும் அன்ருே? எனின், இவன் நடை கண்டானல்லன்; இம்மாலை நடக்குமாயின், அன்ன நடையை ஒக்கும் என்று வியந்தான். அவ்வளவே என்க.

**முடிவுரை :**

இங்ஙனம் பற்பல அரும்பெரும் நுட்பங்கள் செறிந்துள்ள இச்செய்யுளின் அருமைப்பாடும், இதனை முதலாகக் கொண்டு விளங்கும் திருச்சிற்றம்பலக் **கோவையார்** நூற்சிறப்பும், எல்லையற்றனவாகும். இவற்றைப் பலகால் ஓதியுணர்ந்து பயன்பெறுதல், நம்மனேரின் தலையாய கடமையாகும்.

—ஆசிரியர்

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| குடியேற்றம் : | ரதசப்தமி விழா. |
| திருமுருகன்பூண்டி : | தேர்த் திருவிழா. |
| திருப்பரங்குன்றம் : | தெப்பவிழா. |
| திருக்கடம்பந்துறை : | மாசிமக விழா. |
| விருத்தாசலம் : | ,, ,, |
| திருச்செந்தூர் : | ,, ,, |
| திருப்பாம்புரம் : | ,, ,, |
| திருக்கோட்டியூர் : | தெப்போற்சவம். |
| மேல்மலையனூர் : | பிரம்மோற்சவம். |
| திருமீயச்சூர் : | ரதசப்தமி. |
| திருச்சாட்டியக்குடி : | மாசிமகத் திருவிழா. |

# உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்

(கோவை திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A.,B.L.)

சோழ வேந்தர்களின் காலத்தில், முடியரசின் கீழ், நாட்டுப் புறங்களில் குடியரசுக் கொள்கைகள் பரவியிருந்தது, நன்கு கையாளப்பட்டது என்பதற்கு **உத்தரமேரூர்க்** கல்வெட்டுக்கள், நல்ல சானறுகளாக விளங்குகின்றன. அக்கல்வெட்டுக்கள் அரசாங்கத்தினரால் படியெடுக்கப்பட்டு, எபிக்ராஃபியா இண்டிகாவில் ஆங்கிலத்தில் வெளியிடப் பெற்றிருக்கின்றன. அவற்றைப்பற்றித் திரு. கே. வி. சுப்பிரமணிய ஐயர், டாக்டர் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் போன்ற அறிஞர்கள், தத்தம் நூல்களில் குறிப்பிட்டு ஆராய்ந்து எழுதி யிருக்கின்றனர். அண்மையிலே '**திருக்கோயில்**' இதழிலும், அதன் ஆசிரியரால் தமிழில் பிரதி செய்யப்பட்டுள்ளன. (1963, மார்ச்சு மாத இதழ், பக்கம் 300).

உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள் பராந்தக சோழன் காலத்தில் (கி. பி. 919—921), முறையே அவனது 12, 14-ஆம் ஆட்சியாண்டுகளில் பொறிக்கப்பட்டனவாகும்.

இத்தகைய ஊராட்சி அமைப்புகள் மானூர், உக்கல், வல்லம், ஆதன்பாக்கம், பாற்கடல், காவேரிப்பாக்கம், மணலி, அன்பில், கூரம், தணிகை, கடலூர் முதலான பல இடங்களிலும் இருந்தன, என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கல்வெட்டுக்களில் சோழர் காலத்து ஆட்சி அமைப்பையும், ஆட்சியாளர்களின் தேர்தல்களைப் பற்றிய முறைகளையும் குறித்திருக்கக் காணலாம். இவைகள் எல்லாவற்றிலும் உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் உள்ளன.

இவ்வாட்சி முறை சங்கத்தார் கால முதற்கொண்டே இருந்து வந்திருக்கின்றது. சங்க காலப் புலவர் ஒருவர், அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (77), பண்டைக் காலத்துத் தேர்தல் முறையினை உவமையாக அமைத்துப் பாடியிருக்கும் பகுதியினைத் திரு. முருகவேள் எடுத்துக் காட்டியுள்ளார். (திருக்கோயில் 1963, மார்ச்சு). "**குடிபதிப் பெயர்ந்த**" என்று தொடங்கும் அப் பாடலில், குடவோலையிலிருந்து ஆவணமாக்கள் இளைஞரைக் கொண்டு ஓலை எடுப்பதுபோலப் போர்க்களத்தில் கழுகுகள் இறந்தோர் வயிறுகளிலிருந்து குடர்களை வெளியே குத்திக் கொணர்கின்றன. என்ன பொருத்தமான எடுத்துக்காட்டு என்று பாருங்கள். தேர்தல் முறை அக்காலத்தில் அத்தனை வெளிப்படை முறையாக இருந்தது போலும். பண்டைக் காலத்துத் தேர்தல் நடைமுறையினை அப்பழம்பாடல் அழகுற விளக்குகின்றதல்லவா?

உத்தரமேரூர் என்ற ஊர் தற்போது உத்தரமல்லூர் என்று வழங்குகிறது. அது செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் உள்ள ஒரு ஊர். சோழர் காலத்தில் அது ஒரு அக்கிரகாரமாயிருந்தது, உத்தரமேரு சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் விளங்கிற்று. அது 12 பதாகைகளாகவும், 30 பிரிவுகளாகவும் இருந்தது. அவ்வூர் மகாசபை எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டது, எவ்வாறு பொதுப் பணி செய்தது, அதன் விதிகள் எவ்வெவை முதலான விவரங்கள், இக்கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. மிகத் தேர்ந்த அரசியல் அமைப்புகளிலும் இவ்விதமான மேன்மைப்பாடு காண்பதரிது. அவ்விதமான அமைப்பு பிற்காலத்தில் எவ்வாறு அழிந்ததோ அறியோம்.

ஆட்சி முறைக்காக ஊர்ச்சபையார் சில குழுக்களை வகுத்திருந்தார்கள். அவைகளை **வாரியம்** என்ற சொல்லால்

குறித்திருந்தார்கள். அடியிற் கண்ட வாரியங்கள் கூறப்பட்டுள்ளன.

1. **சம்வத்சர வாரியம்:** ஆண்டு முழுதும் ஆட்சி புரியும் குழு.

2. **தோட்ட வாரியம்:** தோட்டங்களைக் கண்காணிக்கும் குழு.

3. **ஏரிவாரியம்:** பாய்ச்சல் ஏரிகளைக் கண்காணிக்கும் குழு.

4. **கழனி வாரியம்:** வேளாண்மை நிலங்களைக் கண்காணிக்கும் குழு.

5. **பஞ்ச வார வாரியம்:** பொதுப் பணிகளைக் கவனிக்கும் குழு.

6. **கணக்கு வாரியம்:** கிராமக் கணக்குகளைப் பரிசீலனை செய்யும் குழு.

7. **கலிங்க வாரியம்:** மதகுகளைக் கண்காணிக்கும் குழு.


8 **தடிவழி வாரியம்:** கிராமப் பொதுப் பாதைகளைக் கண்காணிக்கும் குழு.

ஒரு கல்வெட்டின்படி குடும்ப வாரியம் என்று ஒன்பதாவது வாரியம் இருந்தது. அது வேளாண்மைக் குடிகளைப் பற்றியது. பிராமணர்கள் ஒரு தனிக் குழுவாக இயங்கித் தங்களுடைய நலத்தைக் காத்துக்கொண்டார்கள், சில குழுக்கள் மிகப் பெரிதாக இருந்தால் இரண்டாகப் பிரிந்து வேலை செய்வதுண்டு. சில ஊர்கள் தனியாகவும் கூட்டாகவும் இயங்குவதுண்டு. **கூற்றம்** என்பது பல ஊர்கள் சேர்ந்து இயங்கின தொகுதி. உத்தர மேரூர் ஒரு கூற்றம். அதுபோல் தக்கோலம், உக்கல், மாமல்லை முதலான சில ஊர்களும் இருந்தன. உத்தரமேரூரில் நிலங்கள் பதாகைகளாகப் பிரிக்கப்பட்டன. ஒரு **பதாகை** 240 குழிகள் கொண்டது. அவற்றின் மேல்வரி **புரவுவரி** என்று குறிக்கப்பட்டது.

உத்தரமேரூரில் **வைரமேகன் தடாகம்** என்ற ஒரு பாய்ச்சல் ஏரி இருந்தது. அவ்வேரியிலிருந்து இருபது கால்வாய்கள் பிரிந்து நிலங்களுக்கு நீர் பாயும். அந்த ஏரியை மராமத்து செய்ய அநேக படகுகளை வைத்திருந்தார்கள், மேலும் வழிக்குழு, கல்விக் குழு முதலியனவும் இருந்தன. வேதம் முதலியன ஓதப்பட்டன. அதற்குப் **பட்ட விருத்தி** என்று பெயர். கோயில் பரிபாலனம் ஒரு சிறந்த பொதுப்பணி. சாதாரண கோவில்களையன்றி, சப்த மாதர்கள், சேஷ்டாதேவி, பிடாரி, முதலிய கோயில்களும் இருந்தன, சபை இவைகளையும் மேல்பார்த்தன. பாய்ச்சல் வசதியில் சிறு கால்வாய்களுக்கு **கண்ணாறு** என்று கூறப்பட்டது. இவைகளுக்கும் பாதுகாப்பு தரப்பட்டது, அவ்வப்போது மராமத்து செய்யப்பட்டது.

இன்று காவேரிப்பாக்கம் என வழங்கும் ஊர் முன்பு **காவிதிப்பாக்கம்** என வழங்கி வந்தமை ஒரு கல்வெட்டினாற் புலனாகின்றது. எட்டி காவிதி ஏனாதி முதலியன, அரசர்களால் தக்கவர்களுக்கு அளிக்கப்பெறும் சிறப்புப் பட்டப் பெயர்கள் ஆகும். அம்முறையில் அமைந்ததே காவிதிப்பாக்கம் என்னும் ஊரின் பெயர்! அக் காவிதிப்பாக்கம் மகாசபையைச் சேர்ந்த ஊர் ஆகிய **திருப்பாற்கடல்** (அவனிநாராயண சதுர்வேதி மங்கலம்) கல்வெட்டு ஒன்றில் (1561), மேலே நாம் குறித்த வாரியங்களின் பெயர்கள் அனைத்தும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இவ்வூரிலும் சம்வத்சரம், தோட்டம், ஏரி, கழனி, பஞ்சவாரம், கணக்கு, கலிங்கு, தடிவழி முதலிய வாரியங்கள் பலவும் இருந்திருக்கின்றன. இவ்வூர் உத்தரமேரூர்க்கு அருகில் உள்ளது. இங்குள்ள கல்வெட்டு ஒன்று (158), அவனிநாராயண வாடி, வைரமேகன்வாடி, விடேல்விடுகு வாடி முதலிய சில தெருக்களின் பெயர்களையும் குறிக்கின்றன. இவைகள் எல்லாம் வரலாற்றுச் சிறப்பும் தொடர்புடைய பெயர்கள் ஆகும். மற்றொரு கல்வெட்டு (159), உத்தரமேரூர் **வெண்ணெய் மூர்த்திப் பெருமான்** (நவநீத கிருஷ்ணன்) கோயிலுக்குச் செய்யப்பட்டதானம் பற்றி அறிவிக்கின்றது. *

10 JAN 1966
MADRAS



‘ஆலமர் செல்வர்’

(தட்சிணாமூர்த்தி)



ஸ்ரீ ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி, திருவாலங்காடு

# அச்சிறுபாக்கம் கல்வெட்டுக்கள்

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

அச்சிறுபாக்கம் சென்னைக்குத் தெற்கில் 60 கல் தொலைவில் மதுராந்தகத்தை அடுத்துள்ள சிவத்தலம். இது கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் பதிகம் மட்டும் கொண்டுள்ளது, திருஞான சம்பந்தர்,

"அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே" என்று பாடியுள்ள பாடலின் கடைசி வரியிலுள்ள ஆட்சி கொண்டார் என்பது அத்தலத்து இறைவர் பெயராகப் பின் நூற்றுண்டுகளில் வழங்கலாயிற்று.

## கல்வெட்டுக்கள்

இக்கோவிலில் 30 கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. கி. பி. 11-ம் நூற்றுண்டிலிருந்து 16-ஆம் நூற்றுண்டு வரையில் இந்நாட்டை ஆண்ட சோழர், பாண்டியர், விசயநகரவேந்தர் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் வெளிப்பட்ட கல்வெட்டுக்கள் இக்கோவிற் சுவர்களில் உள்ளன.

அரசர்கள், அரசியல் அலுவலர், வணிகர், கோவில் பணிமக்கள், பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலிய வற்றை ஊரவையாரிடம் அல்லது கோவில் ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் ஒப்புவித்தல் வழக்கம்; இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும் 'விழாக்கள் முதலியவற்றுக்கும் நிலத்தையும் பணத்தையும் கொடுப்பது வழக்கம்; கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ காசையோ கொடுப்பதும் உண்டு. இத்தகைய அறங்கள், என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்க் கற்களில் செய்திகளாக வெட்டப்பட்()ள்ளன. அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும் அவர்தம் வீரச் செயல்களும் அக்கல்வெட்டுக்கள் எழக்காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும் அவற்றில் பொறிக்கப் படுதல் அக்கால வழக்கம்.

இனிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் விவரங்களை இங்குக் காண்போம்:

## அரசர்கள்

| | | |
|---|---|---|
| இராசேந்திர சோழன் I | கி.பி. | 1012—1044 |
| வீரராசேந்திரன் | ,, | 1063—1169 |
| விக்கிரமசோழன் | ,, | 1118—1135 |
| குலோத்துங்கன் II | ,, | 1133—1150 |
| இராசராசன் II | ,, | 1146—1163 |
| குலோத்துங்கன் II | ,, | 1178—1218 |
| ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் | ,, | 1249—1258 |
| மாறவர்மன் விக்கிரமபாண்டியன் | ,, | 1268—1281 |
| வீரபாண்டியன் (பிரதிநிதி) | ,, | 1268—1281 |
| சடையவர்மன் சுந்தரபாண்டியன் II | | 1276—1293 |
| புக்கராயர் I | ,, | 1355—1376 |
| இராச நாராயண சம்புவராயர் | ,, | 1356 |
| குமார கம்பண உடையார் | ,, | 1367 |
| சாளுவ நரசிங்கர் | ,, | 1485—1493 |
| கிருஷ்ண தேவராயர் | ,, | 1509—1529 |

## நில அறம்

(1) மலைமண்டலத்தான் ஒருவன் விழாக் காலத்தில் திருப் பாவாடை அமுது செய்தருளக் கோவிலுக்கு 2300 குழி நிலத்தை வழங்கினன்.

(2) பல்லவராயன் என்ற ஒருவன் வைகாசித் திருநாளுக்குக் குடிநீங்காத தேவதானமாக வெள்ளரிப்பட்டு என்னும் சிற்றூரை வழங்கினன்.

(3) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துக் காவல்காணியுடையவன் முதலியும், அவன் தம்

பியர் இருவரும் உள்ளூரிலேயே ஒரு நிலத்தைத் திருநாமத்துக்காணியாக உதவினர்.

(4) தேன்பரக்கப்பற்றைச் சார்ந்த நாட்டார் புரட்டாசித் திருநாளுக்குச் சித்திரமேழி நல்லூர் நிலங்களை வழங்கினர்.

(5) ஓய்மானாட்டு நெற்குன்றமான செம்பியன் சாத்தூர், முடியம்பாக்கம், கடகவட்டி, காட்டு அரிந்தவச் சாத்தனூர், சிறுகடுவன் பாக்கம். வயலூர் ஆகிய ஊர்களில் இருந்த சில வயல்கள் ஒன்று சேர்த்துக் 'கலிகடிந்த சோழச் சாத்தனூர்' என்ற பெயரில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் தானமாக வழங்கப்பட்டன.

(6) அதே மன்னன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென்பிடாகையான ஒடுவத்தூர், அமண்பாக்கம் என்பவை தேவதானமாக விடப்பட்டன.

(7) இக்கோவிலுள் தனியாக வைக்கப்பட்ட குலோத்துங்க சோளீசுவரமுடையாரது பூசைக்கு ஓய்மானாட்டுப் பசாறு தேவதானமாக விடப்பட்டது.

(8) மாறவர்மன் காலத்தில் ஏழாயிரவேலி வடபாதி நாட்டவர், வடபாதி சதுரப்பட்டு என்னும் சிற்றூரைத் தேவதானமாக விட்டனர்.

(9) குமார கம்பண உடையார் பிரதானி சோமப்பர் நிருபப்படி கொப்பணர் என்பவர் காஞ்சிபுரத்துப் பெருமாள் கோவில் மடத்துக்கு மடப்புறமாக அச்சிறுபாக்கப் பற்றில் மாத்தூர் வடபால் முனையதரைய நல்லூரைத் தானமாக விட்டார்.

(10) திருமுனைப்பாடி நாட்டாரும் வேறு பலரும் அச்சிறுபாக்கம் தென்பிடாகையில் உள்ள ஆயக்குன்றம் என்னும் சிற்றூரைக் குடிநீங்காத் தேவதானமாக வாங்கி வழங்கினர்.

(11) சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இக்கோவில் தேவரடியாரில் பெரிய சாநிநங்கை என்பவளுடைய மகன் ஆண்டான் கண்டிப தேவன் என்பவன் சோற்றுப்பாக்கம், திருவளச்சேரி, பிறையூர், பரக்கம் பாலி ஆகிய ஊர்களை எல்லைகளாகக் கொண்ட நிலங்களை வழங்கினான்.

(12) ஆதமங்கலவன் அரையன் ஆட்சிகொண்ட நாயகனான சேதிராயன் என்பவன் கோவிலில் எழுந்தருளுவித்த தேவருக்காக மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென்பிடாகை விராலூரில் 16 வேலி நிலத்தை இறையிலி தேவதானமாக வழங்கினான்.

## விளக்கு அறம்

அக்காலத்தில் கோயில்களில் எடுக்கப்பட்ட விளக்குகள் பலவகைப்பட்டன; காலை மாலைச் சந்தி நேரங்களில் எரிக்கப்பட்ட 'விளக்கு சந்தி விளக்கு எனப்பட்டது; எப்பொழுதுமே அணையாமல் எரிக்கப்பட்ட விளக்கு நந்தா விளக்கு எனப்பட்டது; இரவு நேரங்களில் குறிப்பிட்ட கால அளவில் எடுக்கப்பட்ட விளக்குகளும் வழக்கில் இருந்தன.

ஒரு விளக்கு, அரைவிளக்கு, கால்விளக்கு, அரைக்கால் விளக்கு என்று பலவகை அளவுகளைக் கொண்டு விளக்குகள் பெயர் பெற்றன. செய்யும் அறங்களுள் விளக்கெரிக்கும் அறமே மிகச் சிறந்தது என்பது நம் முன்னோர் கருத்து. தம் நலனுக்காகவும், தம் வீட்டவர் நலனுக்காகவும், அரசன் நலனுக்காகவும், செய்த குற்றத்திற்குத் தண்டனையாகவும் மக்கள் கோவில்களில் விளக்கெரித்து வந்தனர். இங்ஙனம் விளக்கறம் செய்பவர்கள் ஆடுகள், பசுக்கள், எருமைகள், பணம் இவற்றுள் ஒன்றைக் கோவிலாரிடம் ஒப்புவித்தல் வழக்கம். அவர்கள் அவ்வறத்தைத் தொடர்ந்து செய்துவருதல் மரபு. உள்ளூராரும் வெளியூராரும் இத்தகைய அறங்களைச் செய்தனர்.

(1) சோழ மண்டலத்தைச் சேர்ந்த ஆட்கொண்ட வில்லி என்பவன் ஒரு சந்திவிளக்கு எரிக்கப் பன்னிரண்டு ஆடுகளை விட்டான்.

(2) இக்கோவில் கைக்கோளருள் வருவனான பிச்சத்தேவன் என்ற கடாரத்தரையன் சமய சேனாபதி ஒரு நந்தா விளக்கு எரிக்கப் பதினைந்து கழஞ்சு பொன் வழங்கினான்.

(3) ஆமூர்க் கோட்டத்து வேளாளன் அம்மையப்பன் ஒரு நந்தா விளக்கு எரிக்கப் பத்து எருமைகளை விட்டான்.

(4) அச்சிறுபாக்கத்தை அடுத்த அறுவர் காரணையைச் சேர்ந்த விழுப்பரைய நாட்டு மன்றுடி பன்னிருவன் என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகளை விட்டான்.

(5) ஏழாயிர வேலி வடபாதி நாட்டவர் 5 நந்தா விளக்குகள் எரிக்க நிலம் வழங்கினர்.

(6) அச்சிறுபாக்கத்தைச் சேர்ந்த சிங்கன் என்பவன் ஒரு சந்தி விளக்கு எரிக்கப் பன்னிரண்டு ஆடுகளை விட்டான்.

(7) வளர்பிறை விராயூரைச் சேர்ந்த பிராமண சோமாஞ்சாநி என்பவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க எட்டுக்காசுகளை வழங்கினான்.

(8) அருளாளபட்டன் என்பவன் ஒரு சந்தி விளக்கு எரிக்கப் பன்னிரண்டு ஆடுகளை விட்டான்; ஒரு நந்தா விளக்கு எரிக்க எட்டுக் காசுகளை வழங்கினான்.

(9) கலியன் சிங்கன் கைபிழை குற்றத்தால் அரை நந்தா விளக்கு எரிக்க 42 ஆடுகளை வழங்கினான்.

(10) சிறுபேறூர் வேளாளன் சேக்கிழான் பழந்தைக் கண்ணன் அரை நந்தாவிளக்கு எரிக்க 45 ஆடுகளை விட்டான்.

இக்கோவில் சிவப்பிராமணர் இவ்விளக்குகளை எரிக்க ஒப்புக் கொண்டனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.

## பிற அறங்கள்

(1) அம்மையப்பன் சம்புவராயன் என்பவன் கடவுள் வழிபாட்டுக்குத் தனி இறை, தட்டார்பாட்டம் முதலிய வரிகளின் வருவாயைக் கோவிலுக்கு வழங்கினான்.

(2) செங்கேணி அம்மையப்பன் இராசராச சம்புவராயன் இரண்டு பொன் பட்டயங்களைச் சுவாமிக்கு வழங்கினான்.

(3) அத்திமல்லனான குலோத்துங்கச் சோழச் சம்புவராயன் அச்சிறுபாக்கமும் நெற்குன்றமும், புளியுண்ணியும் உள்ளிட்ட ஊர்களில் வரும் சில வரிகளைக் கோவில் பூசைக்கும் திருப்பணிக்கும் பயன்படும்படி செய்தான்.

(4) இராச நாராயண சம்புவராயன் சுவாமியின் படையலுக்கு அச்சிறுபாக்கத்துப் பாடிகாவல் வருவாயை வழங்கினான்.

(5) வீரராசேந்திரன் காலத்து அச்சிறுபாக்கம் அதிகாரியான பல்லவரையன் அச்சிறுபாக்கத்து வரிகள் பலவற்றைக் கோவிலுக்கு வழங்கினான்.

## பொதுச் செய்திகள்

(1) பிடாரர் - இவர் கோவில்களில் திருப்பாடல்களை ஓதுபவர்.

(2) பிரம்ம மாராயன் 'மாராயம்' என்பது, அரசன், தகுதி உடையதன் அரசாங்க அதிகாரிக்கு வழங்கும் சிறப்புப் பெயராகும். இதனைப் பெற்றவன் மாராயன் எனப்பட்டான். அவன் மனைவி 'மாராசி' எனப்பட்டாள்.

(3) முகவெட்டி ஊர்களின் பெயர்கள் முதலிய எல்லாவற்றிற்கும் அட்டவணை தயாரித்து அவற்றை வரிப்புத்தகம் முதலியவற்றில் எளிதில் தேடிக் காண்பதற்குத் துணைபுரியும் அலுவலன்.

(4) ஆண்டார் - இவர் கோவிலைத் தூய்மை செய்தல், மலர்களைப் பறித்தல் முதலிய கோவில் வேலைகளைச் செய்து வந்த அடியவர்,

(5) ஒவ்வொரு நாட்டிலும் சில ஊர்களில் அரண்மனைகள் இருக்கும். அரசன் அந்தந்த அரண்மனையில் இருக்கும் போது, மக்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப அறங்கள் செய்வது வழக்கம். அவ்வழக்கப்படி இரண்டாம் குலோத்துங்க சோழன் விக்கிரம சோழபுரத்துக் கோயில் (அரண்மனை) அபிஷேக மண்டபத்து முத்துப் பந்தலின்கீழ் எழுந்தருளியிருந்து ஆணை பிறப்பித்தான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இவ்வாறே மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள் என்ற பாண்டியன், குலசேகரன் பட்டினத்திலிருந்து திருவாய் மலர்ந்தருளியபடி ஏழாயிரம் வேலி வடபாதி நாட்டவர் சதிரப்பட்டு என்ற சிற்றூரைத் தேவதானமாக விட்டனர்.

(6) அக்காலத்தில் வழக்கில் இருந்த பலவகை வரிகளின் பெயர்கள் இக்கோவில் கல்வெட்டுக் களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

(7) அச்சிறுபாக்கம், ஊர் அவையார் ஆட்சி யிலிருந்தது.

(8) அச்சிறுபாக்கம் கோவிலில் பண்டாரம் (பொக்கிஷ சாலை) இருந்தது.

(9) உணவுப் பொருள்கள் 'அமுது' என்று அக்காலத்தில் பெயர் பெற்றன. கறி அமுது, உப்பு அமுது, மிளகு அமுது, பால் அமுது, நெய் அமுது, பிட்டமுது, அடைக்காய் இலை யமுது என்ற பெயர்கள் வழக்கில் இருந்தன.

(10) நெல் அளக்கப் பயன்பட்ட மரக்கால் மதுராந்தக தேவன் மரக்கால் எனப்பட்டது. மதுராந்தகன் என்ற பெயர் 'மதுரைக்கு எமன்' என்ற பொருளுடையது. முதற் பராந்தக சோழன் (கி. பி. 907 - 955) மதுரையைக் கைப் பற்றினன். அவனுக்குப் பின்பு அவன் பெயர னை உத்தம சோழன் 'மதுராந்தகன்' எனப் பட்டான். எனவே, இவ்விருவருள் ஒருவர் பெயரால் மரக்கால் வழங்கப்பட்டது என்று கொள்வது பொருத்தமாகும். இம்மரக்கால் இன்னும் இவ்வட்டாரத்தில் வழக்கில் இருப்பது குறிப்பிடத்தகும்.

## நாட்டுப் பிரிவுகள்

(1) சயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீ மதுராந் தகச் சதுர்வேதி மங்கலம்.

(2) சோழ மண்டலத்துத் தென்கரை உய்யக் கொண்ட சோழ வளநாட்டுச் செல்கல்.

(3) ஆமூர்க் கோட்டத்து மொந்தூர் நாட்டு வெண்கலப்பாக்கம்.

(4) ஓய்மானடான விசயராசேந்திர சோழ வளநாட்டுச் சேவூர் நாட்டுச் சேவூர்.

(5) இராசாதிராச வளநாட்டுத் திருமுனைப் பாடி நாடு.

(6) வெண்குன்றக் கோட்டத்துத் தமனூர் நாட்டுச் சிற்றமண்பாக்கம்.

தமிழகத்தில் சோழராட்சி ஏறத்தாழக் கி. பி. 875 முதல் 1275 வரையில் இருந்தது என்று கூறலாம். அக்காலத்தில் களத்தூர்க் கோட் டத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் தனியூராக விளங்கியது. அச்சிறுபாக்கம் அத் தனியூரின் சிற்றூராக இருந்தது என்பது "களத் தூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் திரு அச்சிறுபாக்கம்" என்னும் கல்வெட்டுத் தொடரால் நன்கு தெளி யலாம். சோழர் ஆட்சிக்குப் பின்பு உண்டான பாண்டியராட்சியில் (வீரபாண்டியன் காலத்தில்) "களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் அச்சிறு பாக்கம்" எனப்பட்டது. பின்பு வந்த விசய நகர வேந்தர் காலத்திலும், "ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் தென்பால் தனியூர் திரு அச்சிறுபாக்கம்" எனப்பட்டது. இவற்றை நோக்க, அச்சிறுபாக்கம் சோழர் காலத்தில் சிற்றூராக இருந்தது என்பதும், பின்பு காலப் போக்கில் விரிவடைந்து 'தனியூர்' என்னும் தகுதியைப் பெற்றது என்பதும் நன்கு புலனு கின்றன.

## ஊர்கள்

தனியூராக விளங்கிய மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் பல சேரிகளைத் தன்னகத்தே பெற்றி ருந்தது. கோதண்டராமச் சேரி, பரகேசரிச் சேரி, வீரசோழச் சேரி என்பன அச்சிறுபாக்கம் கல் வெட்டுக்களில் காணப்படுகின்றன. அதனைச் சுற்றியுள்ள ஊர்களாகக் கூடலூர், முறப் பாக்கம், தண்டலம், குட்டமங்கலம், குமனிப் பாக்கம். தேன்பாக்கம், சித்திரமேழிநல்லூர், அறுவர் காரணை, விழுப்பரையநாடு திரு ஆய்ப்பாடி, குண்டூர், சிறுநாவல், சோற்றுப் பாக்கம், பிறையூர், செய்யாற்றில் வென்றான், புளியுணி, வெள்ளரிப்பட்டு, சிறுபேறூர் என் பவை குறிக்கப்பட்டுள்ளன. சிறுபேறூர்க்கு மறுதலையாகப் பெரும்பேறூர் உண்டு. அது காலப்போக்கில் பெரும்பேர் என மருவி வழங் குகிறது. அச்சிறுப்பாக்கமும் அதனைச் சூழ உள்ள சிற்றூர்களும் சேர்ந்த நிலப்பகுதி 'அச்சிறுபாக்கப்பற்று' எனப் பெயர்பெற்றது. இவ்வாறே தேன்பாக்கமும் அதனைச் சூழ உள்ள

சிற்றூர்களும் சேர்ந்த நிலப்பகுதி 'தேன்பாக்கப் பற்று' எனப் பெயர் பெற்றது.

## மக்கட் பெயர்கள்

இக்கோயில் கல்வெட்டுக்களின் காலமான 11-ஆம் நூற்றுண்டு முதல் 16-ஆம் நூற்றுண்டு முடிய வாழ்ந்த மக்களின் பெயர்களுள் சில இக்கோவில் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவற்றுள் சில பெயர்கள் நீண்டு காணப்படுகின்றன. சூற்றியதேவன் ஆட்கொண்ட வில்வி, பிச்ச தேவனுன கடாரத்தரையன் சமைய சேனுபதி, பள்ளிகொண்டான் பூமனுன புவனி விச்சாதிரத்தேவன், பாலமுழான் வேளான் அம்மையப்பன், கந்தமுழான் கூத்தன் திருவெண்காடு தேவனுன பல்லவராயன், பூவடையான் மாதவராயன், செம்பியதரையன், சொக்கன் சம்புவராய மலையமான், தேவப் பெருமாள் மதுராந்தகப் பல்லவரையன், நாராயணபட்டன், சிவலோகம் உடையார், விசயராசன், கங்கைகொண்ட சோழக் களப்பாளன், நெடுங்குன்றக் கிழான், குமரன் மலையமான், கிழவன் ஸ்ரீ கயிலாயமுடையான், குப்பன், அரியான் குழலுடையான், கோனுழான் செல்வன், நாராயணப் பெரும்பட்டன், பெரியரையன், சிங்கன், ஆண்டான் கண்டிய தேவன், அருளாளபட்டன், பெரிய சாநி நங்கை.

சாநி என்பது பெண்களுக்கு வழங்கப்பட்ட கௌரவச் சொல்லாகும். துரைசாநி என்பதில் 'சாநி' உள்ளதைக் காண்க. தெலுங்கில் இச் சிறப்புப் பெயர் மிகுதியாக வழங்கிற்று; காலப் போக்கில், ஒழுக்கக் கேட்டினரைக் குறிக்கவும் இது பயன்படலாயிற்று.

## முடிவுரை

அச்சிறுபாக்கக் கல்வெட்டுக்களுள் திருக்கோவலூரை ஆண்ட சேதிராயர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் படை வீட்டுச் சீர்மையை ஆண்ட சம்புவராயர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பல்லவராயர், முகவெட்டி போன்ற அரசியல் அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர். நாடு காவல்புரிந்த அதிகாரிகளும் சமயத் துறையில் பங்குகொண்டு, பலவகை வரிகளால் வந்த வருவாயைக் கோவிலுக்கு உதவினமையும், முடி மன்னரது சமயப் பற்றும், கொடைத் தன்மையும் அக்காலத்துப் பொதுமக்களுக்குச் சமயத் துறையில் மிகுந்த பற்றினை வளர்த்தன என்பது இங்கு அறியத்தகும்.

## இன்றுள்ள கோவில் *

இன்றுள்ள அச்சிறுபாக்கம் சிவன் கோவிலில் ஆட்சிகொண்ட நாயனர் கோவிலும், அதற்கு வலப்புறத்தில் குலோத்துங்க சோழீசுவரர் கோவிலும் அமைந்துள்ளன. முன்னது உமையாட்சி ஈசுவரர் கோவில் என்றும், பின்னது எமையாட்சி ஈசுவரர் கோவில் என்றும் கூறப்படுகின்றது. முன்னது ஆட்சிகொண்ட நாயனர் கோவில் என்றும், பின்னது குலோத்துங்க சோழீசுவரர் கோவில் என்றும் சொல்லப்படுவதே முறையாகும். இவ்வாறு எழுதுவது நல்லது. எமையாட்சி ஈசுவரர் கோவில் புறச் சுவர்களில் தாம் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அதுவே பாடல்பெற்ற கோவில். அக்கோவிலின் முன்புறச் சுவரில் கண்ணப்பர், சண்டீசர் வரலாற்று நிகழ்ச்சிகள் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

## பழைய அச்சிறுபாக்கம்

அச்சிறுபாக்கம் இன்று சிற்றூராகக் காணப்படுகிறது. சோழர் காலத்திற்குப் பின்பு அது தனியூராக இருந்தது என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சிவன் கோவிலுக்குக் கிழக்கே ஒரு பர்லாங்குத் தொலைவில் வயல்களுக்கு இடையில் கொட்டாரமேடு என்ற நிலப் பகுதி உள்ளது. அங்கு நிலத்திற்கு அடியில் இருந்து அம்மி, உரல் முதலிய வீட்டுப் பொருள்கள் கிடைத்தனவாம். அங்குப் பலவகைக் கற்கள் இன்றும் கிடைக்கின்றன. கோவிலுக்குத் தென் கிழக்கில் மூன்று பர்லாங்குத் தொலைவில் வயலில் ஒரு சிவலிங்கம் உள்ளது. ஊருக்கு வட கிழக்கில் சிவன் கோவிலும், மேற்கில் பெருமான் கோவிலும் இருப்பது இலக்கணம். அந்த முறைப்படி கொட்டார மேடும் அதைச் சுற்றியுள்ள வயல்களும் சோழர்க்குப் பிற்பட்ட காலத்தில் அச்சிறுபாக்கத்தில் பெரும் பகுதியாக இருந்திருத்தல் வேண்டும். இப்பகுதியை அடுத்துள்ள பெரிய ஏரியின் ஒரு பகுதியில் பழைய அச்சிறுபாக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்று செவிவழிச் செய்தி செப்புகிறது. எனவே, கல்வெட்டுக்கள் குறித்த 'தனியூர்' என்ற தகுதி அச்சிறுபாக்கத்துக்கு இருந்தது என்பது உண்மையாகும்.

*

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

உடையவர் திருக்குருகூரில் சில காலம் தங்கியிருந்தார். அதுபோது அந்நகரில் இருந்த அனைவரும் அவர் திருவடிகளை ஆச்ரயித்து க்ருதார்த்தராயினர். ஒரு நாள் ஈரங்கொல்லிச் சலவையாளர் ஒருவர் இவர் திருவடிகளிலே சேவித்து நின்றார். அவருடைய பிள்ளைகள் நால்வர் சற்று தூரத்தே நின்றுகொண்டிருந்தார்கள். அவன் அப்பிள்ளைகளை ஓரொருவராகப் பெயர் சொல்லி அழைத்தான். முதலவனை 'சடகோபா வா' என அழைத்தான். அவன் வணங்கியதும் இரண்டாமவனை 'ஏய்! காரிமாரு' என்று கூப்பிட்டான். பின் 'வகுளாபரணு' என்று கூவி மூன்றுமவனைப் பணியச்செய்தான். சிறுவனும் தயங்கி நின்ற தன் கடைசிப் பையனை 'அருமையாகக் கையைப்பிடித்து எம்பெருமானார் முன் அழைத்து வந்து' இவன் என் கடைக்குட்டிங்க. குருகூர் நம்பின்னு பேரு' என்று அறிமுகப்படுத்தி 'அப்பா குருகூர் நம்பி நீயும் கும்பிடு போடையா' என்று செல்லமாகச் சொல்லி வணங்கச் செய்தான். இராமாநுசர் தன்னை மறந்தவராய்ச் சிறிதுபோது முகத்திலே மகிழ்ச்சி ததும்பக் கண்மூடியிருந்தார். அவர்கண் மலர்ந்ததும் அருகிலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவர் தேவரீருடைய திகைப்புக்குக் காரணம் ஏதோ?" என்று பரிவுடன் கேட்டார். உடையவர் பொங்கியெழும் மகிழ்ச்சியோடு "இப்படி ஆழ்வாருடைய திருப்பெயர்களை இட்டு சதா அழைக்கும்படி பிள்ளைகள் பெறப்பெறும் பேறு கிட்டுமென்றால் சந்யாஸம் கூட வாங்கியிருக்க வேண்டாம் போலிருக்கிறதே என்ற ஒரு எண்ணம் உள்ளத்தே ஓடியது. அவ்வளவே" என்றார். இதைக் கேட்டார்கள் சீடர்கள். அவர்கள் குழுவிலே நின்ற பிள்ளான் என்பவர் "ஸ்வாமி ஆசார்ய சிஷ்ய அடைவிலே அடியேன் தேவரீர் குமாரனேயன்றோ. அடியேனுக்குத் தேவரீர் திருவுள்ளமுகக்கும் பெயரைச் சூட்டியழைக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று பணிந்து கூறினர். உடையவருக்கு உவகை தாங்கவில்லை. எப்படிப் பெயரிடுவது என எண்ணிப்பார்த்தார். ஊரை வலம் வந்ததுவே இத்திருப்பதிப் பெயரை எவருக்கேனும் இட்டழைக்க விழைந்து அரும்பிய ஆசை மலர்ந்தது. ஆழ்வார் பெயரும் வேண்டும். பெயர் சூட்ட வேண்டிநின்றார் ஒருவர். என்ன செய்வது என்று ஒருகணம் சிந்தித்தார். ஈரங்கொல்லியின் கடைக்குட்டி எதிரே நின்று கொண்டிருந்தான். அவன் பெயரை அவன் தந்தை கூறியதை நினைத்தார். "ஆம். குருகூர் நம்பி. ஊர்பேரும் ஆழ்வார் பெயரும் இணைந்த ஒரே பெயர்". சிந்தனைக்கு இனி இடமில்லை. அதேபோல் ஊரும் ஆழ்வாரும் குறிக்கும் ஒரு பெயரை இடத் தீர்மானித்தார்" "பிள்ளான் இனி உனக்குத் "திருக்குருகைப் பிரான்" என்று திருநாமம். இத்திருப் பெயர் முன்னுள உன் முன் பெயரும் சேர்ந்து நீ இன்று முதல் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என அழைக்கப்படுவதாக" என்று திருவாய் மலர்ந்தருளி, அப்பெயராலேயே அவரைப் பன்முறை அழைத்து மகிழ்ந்தார். அதுமுதல் திருக்குருகைப் பிரான் பிள்ளான் என்ற பெயரோடு, பிள்ளான் எம்பெருமானாரின் விசேஷ அன்புக்குப் பாத்திரமான அந்தரங்க சீடரில் ஒருவராய்த் திகழ்ந்தார்.

ஆங்குநின்றேகி வானமாமலையை
அடிதொழுதயன் பணிசெய்யும்
தேங்கமழ் பொழில் சூழ் திருக்குறுங்குடியில்
செறிந்ததிற றேவனை வணங்கிப்
பாங்கொடு திருவாழ்மார்பனைப் பணிந்து
பத்தர்கள்துதித்தெழ வேகி
ஓங்குசீர் வாட்டாற்றினிதமர்ந்துறங்கும்
ஒருவனைத் திருவொடும் பணிந்தே"

ஆதி நாதப்பெருமானையும் அருங்குலநாதரையும் அரிதில் பிரிந்த இராமாநுசர் அங்கு

கின்றும் 'தேனமாம்பொழில் தண்ஸ்ரீவரமங்கலத்தவர் கைதொழ உறை, வானமாமலையை வணங்க அவாமிக்கவராய் அந்தத் திருப்பதியேற எழுந்தருளினர். "சகல தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாகப் பற்று" என்று முன்னை யுகத்திலே உபதேசித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளியவன், அவனைப்பற்ற வல்ல உபாயம் இன்னதென்று கூறுமலே சென்ற குறை நிவிருத்தியாக "என் திருவடியே வழியாக என்னைப்பற்று" என்று உபாயஸ்வரூபத்தின் மர்ம வழியைக் காட்டி நின்ற திவ்ய தேசமல்லவா அது. கைமுதல் ஏதுமில்லாத பொருளல்லாதாரையும் பொருளாக்கி ஆத்மாவின் சேஷத்தன்மைவடிவை உணர்த்திய பாவனமான பதியல்லவா அது. மணிமாடநீடு திருக்குருகூரதனில் குடூர்க்கும் புலனும்படி குன்றம் போல் பொலிந்து நின்று தன் பரத்துவத்தையுணர்த்தி எழுந்தருளியிருக்கும் "ஆதியானவானவர்க்கும் ஆதியான" ஆதிப்பிரானை ஸேவித்தவர் அவனைப் பற்றவல்ல உபாயத்தை அவனே காட்டியருளிய ஸ்ரீவரமங்கலநகருக்கு அடுத்து வந்ததும் பொருத்தமேயன்றோ. அத்திருப்பதி எழுந்தருளிய இராமாநுசர் குட்டிக்கடல் போன்று அலையெறியும் "சேற்றுத் தாமரை"யிலே நீராடி, காஷாயபுண்டர மணிந்து கண்கொள்ளாக்காட்சியராய்த் திருக்கோயில்புக்கு, ஏகாசனத்திலே தன்னுடன் பதினொரு திருநாமமாக வீற்றிருக்கும் வானமாமலையை "ஏனமாய் நிலங்கீண்ட என்னப்பனே" என்று ஆழ்வார் அப்பெருமானது ஔதார்யம் கொழுந்து விட்டெளிரும் பண்பிலே உள்ளம் தோய்ந்து, அப்பெருமானைக் கூவியது போலவே அழைத்து வணங்கி ஸ்ரீவரமங்கை நாச்சியாரையும் ஸேவித்து, உத்ஸவமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தெய்வநாயகனையும் தொழுது தீர்த்தம் ப்ரஸாதம் முதலியன அருளப்பெற்று உவந்த உள்ளத்தாரானர்.

பின்பு திருவாய்ப்பாடியிலே தன்னைக் கொடுபோய் உய்க்குமாறு கதறிய ஆண்டாள்போன்று மானவேல் பரகாலன் தன் ஆண்மையறிந்து பரகாலநாயகியாய் நாயகனைப் பிரிந்து தரியாதே தன் தாபமடங்கத் தன்னைக் கொடுபோய் உய்க்கப் பாரித்த க்ஷேத்திரமான திருக்குறுங்குடியெழுந்தருளத்திருவுள்ளமானர், எதிராஜர். அங்ஙனம் சென்றவர் அத்திருப்பதியிலுள்ள குளனர் கழனி, தென்னஞ்சோலை, கொல்லை முல்லை, இன்துணை நாரைக்கிரைத்தேடி ஒதுங்கும் கூழைப்பார்வை நாரை, மைகொள்மாடம்; பிற சோலைகள் இவற்றையெல்லாம் கடாக்ஷித்து ரஸித்தவராய்த் திருப்பாற்கடலிலே நீராடி, திருப்பரியட்டப் பாறையிலே தம் பரியட்டங்களை வாட்டித் தரித்து பராத்பரன் மகேந்திரன் வேண்டுகோளுக் கிணங்கித் தன் மேனுணிப்பைப் பாராதே தன்னைத்தாழ விட்டு அனைவரும் இகழும் செயலான இரப்பிலே தகணேறிய குறளனுகிக் குடில்கட்டித் தங்கிய சித்தாச்ரமம் என்று பெயர்பெற்ற வாமன க்ஷேத்ரமான அச்குறுங்குடியிலே குன்றம் போல் மணிமாட நீடு வீதிவழியே வலம்வந்து கோயிலுக்கு எழுந்தருளினர். வழியெல்லாம் வாமனன் வண்புகழையும் அவ்வூர்க்கே தனிச் சிறப்பான கைசிகவிருத்தாந்தத்தையும் தினமும் பிரமன் வந்து வழிபாடு செய்யும் விருத்தாந்தத்தையும் தம்முடன் வந்த முதலிகளுக்குப் பரக்கக்கூறி மகிழ்ந்தார். திருக்கோயில் புக்கவர் வலமாக வந்து கரண்டமாடு பொய்கையையும் அருகில் உள்ள கரும்பனையையும் ஸேவித்து அப்பொய்கையில் தீர்த்த ஸ்வீகாரம் செய்து, கலிகன்றி கழலிணைகளிலே தெண்டனிட்டு அவர் புருஷகாரமாக உள்புக்கவர் 'அக்கும்புலியும்' என்ற மங்கைமன்னன் திருமொழியை அனுஸந்தித்து பரத்வத்திலே தன்னேடு எதிரம்பு கோப்பார்க்கும் அருகில் இடம் தந்து நிற்கும் பெருமானது சீலகுணத்திலே ஆழங்கால்பட்டு மனம் கரைந்தவராய் உள்புக்குக் கண்நிறைக்கும் வடிவழகும் உளம் நிறைக்கும் குணகணங்களும் கொண்டு அதனுலேயே சுந்தர பரிபூர்ணர் என்ற திவ்விய திருநாமமுடையவராய் எழுந்தருளியிருக்கும் நம்பியை, அச்செம்பொனே திகழும் திருமூர்த்தியை உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை பராங்குச நாயகியின் கண்ணினல் நோக்கிக் கழிபமிக்கதோர் காதலராய் நின்று கொண்டிருந்தார்.

இவருடைய ஆதராதிசயத்தைக் கடாக்ஷித்துத் திருவுள்ளம் குளிர்ந்து மகிழ்ந்த நம்பிராஜர் அர்ச்சகமுகேன இராமாநுசரை அருளப்பாடிட்டு,

நாம் அவதாரங்கள் செய்து முயன்றும் திருத்த வொண்ணாத வன்னெஞ்சரை நீர் திருத்தியது எங்ஙனேயோ! என்று வியந்துவினவினார். இராமாநுசரும் "கேட்கும் அடைவிலே கேட்டால் சொல்லுகிறோம்" என்ன, நம்பியும் தம் நிலையினின்றிழிந்து இராமாநுசருக்கு ஆதனம் இடுவித்துக் கேட்க அவரும் அவ்வாதனத்திலே தம்மாசார்யரான பெரிய நம்பிகள் இருந்து அருளுவதாகப் பாவித்துக்கொண்டு தாம் நிலத்திலே நின்று,

"ஸர்வேஷா மேவமந்த்ராணாம்
மந்த்ரரத்னம் ஸுபாஹ்வயம்
ஸக்ருத்ஸ்மரணமாத்ரேண
ததாமி பரமம் பதம்
மந்த்ரரத்னம் த்வயம் ந்யாஸ:
ப்ரபத்திச் சரணாகதி:
லக்ஷ்மீ நாராயணாயேதி
ஹிதம் ஸர்வ பலம் ப்ரதம்"

என்று உச்சாரண மொன்றாலேயே சரணாகதியின் தன்மையனைத்தையும் பெறுவதய், அந்த ப்ரபத்தி தாரகமாகவே லக்ஷ்மி நாராயணனால் சகல பலன்களையும் அடைவிப்பதான த்வயத்தை அநுஸந்தித்து, இது காணும் அடியேனுடைய ஸ்பர்சவேதி என்று சொல்லித் தொழுது நின்றார். நம்பியும் மிகவும் உகந்தவராய் "ராமாநுசனை யுடையோம்" என்றருளிச் செய்ய, அவரும் நம்பிக்கு "வைஷ்ணவ நம்பி" என்று திருநாமம் சாத்தியருளினார். நம்பியும் உடையவரை ப்ரம்மரத மேற்றிமகிழ, அவரும் நம்பியைத் தெண்டனிட்டு "நாயினேன் செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே" என்று, தம் குறைபொறுக்கையை வேண்டி நின்றார். நம்பியும் தம் திருவோலக்கத்திலே உடையவருக்கு விசேஷ அருளப்பாடிட்டுத் தீர்த்தப் பிரசாதமும் திருமாலையும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்தருளிக் கௌரவித்தார்.

அங்கு நின்றும் போந்த உடையவர் நெஞ்சிலே த்வயம் தேக்கிட்டு நின்றமையின், அம்மிதுனத்திலே (லக்ஷ்மீ நாராயணன் என்ற இரட்டையிலே) ஆழங்கால்பட்டு, அதே திருநாமம் பொலிய அவன் எழுந்தருளியிருப்பதும், அவன் திருவடி நிலையான சடகோபனைத் திருவயிறு வாய்த்த உத்தமி உடையநங்கையின் அவதாரஸ்தலமுமாகிய திருவண்பரிசாரம் சென்று சேர்ந்தார். ஆழ்வார்க்கு "அச்சேரி"யாகிய அத்திருப்பதியிலே எழுந்தருளியிருக்கும் திருவாழ்மார்பனைத் திருவடிதொழுது "ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம் வாளும் வில்லும் கொண்டு பின்செல்வார் மற்றில்லை." என்று ஆழ்வார் பரிந்துபாடிய இழவு தீரும்படித் திருப்பல்லாண்டை அநுசந்தித்து மங்களாசாஸனம் செய்தருளினார்.

த்வயாநுஸந்தானத்தின் முற்பலனை ஸ்ரீமந் நாராயணன் ஸேவை ஸித்தியாயிற்று வண்பரிசாரத்திலே. அந்த ஸேவையிலே ஈடுபட்டு "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்கண்டசதிர் கண்டவர்க்கு" கிட்டுவது நிலையற்றதும், கர்மத்துக்கு வச்யமானதுமான இக இன்பங்களும், அவற்றையளிக்கும் பிறப்பும் நீங்கப்பெற்று, நிலையான நிரதிசயமான பேறு பெற அவன் காட்டும் தலமான திருவட்டாறு உள்ளத்திலே உதயமாக, அத்திருப்பதியை உன்னிப் புறப்பட்டார் உடையவர்.

ஆழ்ந்து அகன்ற நதிக்கரையிலே கருதுமிடம் பொருதுவரும் கனலாழிப்படையோடு நீண்ட பொன்மேனியோடு, சயனத்திருக்கோலத்திலே தம் தரமறியாது தவிக்கும் பிரமனுக்கும் சிவனுக்கும் நாயகனும் கேசவன் என்ற திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் வானேற வழி தந்த வாட்டாற்றானுக்கு என் நன்றி செய்தேனா என் நெஞ்சில் திகழ்வதுவே" என்று போற்றித் துதித்து உள்ளம் பூரித்தார். ஆழ்வாரது "அருள் பெறுவார்" திருவாய்மொழியை அநுஸந்தித்தவர் "பெரியார்க் காட்பட்டக்கால் பெறுத பயன் பெறுமாறு வரிவாள் வாயரவணை மேல் வாட்டாற்றான் காட்டினனே" என்று வந்தது. குறுங்குடியிலே த்வயோபதேசம் செய்தபோது தமக்கிட்ட ஆதனத்தே பெரிய நம்பியை மனப்பாவனையாலே எழுந்தருள்வித்து அவரைத் தியானம் செய்து அவர் கூறியதாகவே தாம் சொன்னாரல்லவா? அந்த நிகழ்ச்சி திருவுள்ளத்தேயோட அவ்வாசார்யாநுக்ரகபலனாகவே தமக்குத் திவ்யதேச எம்பெருமான்கள் ஸேவை சித்தியாயிற்று என்று, ஆசார்ய உபகார ஸ்மிருதி அவர் உள்ளத்தை நிறைத்தது. கேசவன் ஸேவையினின்றும் தம் கண்களை மிகவும் ச்ரமத்தோடு மறித்து அங்குநின்றும் அனந்தைநோக்கிப் புறப்பட்டார்.

—தொடரும்

# "தேடினும் இல்லை"

"பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்,
(தத்புருஷ தேசிகர்), தேவகோட்டை.

தமிழாகமமாகிய திருமந்திரமாலையை அருளி உபகரித்த திருமூல தேவ நாயனர் சிவபெருமானது பரத்துவ உண்மையை,

"சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே."

என்ற திருப்பாடலில் விளக்குகின்றார்.

புவனங்கள் உண்டாவதற்கும் ஒடுங்குவதற்கும் தாயகமாக இருப்பது 'மாயை'. அது சுத்தம், அசுத்தம், பிரகிருதி என மூவகைப்படும். சுத்த மாயையிலிருந்து நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம், சுத்தவித்தை ஆகிய சிவதத்துவங்கள் ஐந்தும் தோன்றும். இதற்குக் கருத்தா சிவன். இவற்றால் உயிர்களுக்குச் சவிகற்ப அறிவு உண்டாகும்.

அசுத்த மாயையிலிருந்து, தத்துவ அசுத்த மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் ஆகிய வித்தியா தத்துவங்கள் ஏழும் தோன்றும். இதற்குக் கருத்தா அனந்த தேவர். இவற்றால் உயிர்களுக்கு மயக்க அறிவு உண்டாகும்.

பிரகிருதி மாயையிலிருந்து சித்தம், புத்தி, அகங்காரம், மனம், செவி, மெய், கண், நாக்கு, மூக்கு, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகிய ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் தோன்றும். இதற்குக் கருத்தா சீகண்டர். இவற்றால் உயிர்களுக்கு அஞ்ஞானம் உண்டாகும்.

பிரகிருதி மாயையில் பிருதிவி தத்துவம் நிவிர்த்தி கலையை இடமாகவும், பிரமனைக் கடவுளாகவும் கொண்டு நூற்றெட்டுப் புவனங்களை உடையதாய் இருக்கிறது. அதில் அப்பு தத்துவம் முதல் சித்த தத்துவம் வரையுள்ள இருபத்து மூன்று தத்துவங்கள் பிரதிட்டா கலையை இடமாகவும், திருமாலைக் கடவுளாகவும் கொண்டு ஐம்பத்தாறு புவனங்களை உடையனவாயிருக்கின்றன.

அசுத்த மாயையில் வித்தியா தத்துவங்கள் ஏழும், வித்தியா கலையை இடமாகவும் உருத்திரனைக் கடவுளாகவும் கொண்டு இருபத்தேழு புவனங்களை உடையனவாயிருக்கின்றன. சுத்த மாயையில் சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியமாகிய மூன்று தத்துவங்கள் சாந்தி கலையை இடமாகவும், மகேசுவரனைக் கடவுளாகவும் கொண்டு மூன்று புவனங்களை உடையனவாயிருக்கின்றன. அதில் விந்து, நாதம் ஆகிய இரண்டு தத்துவங்கள் சாந்தியதீத கலையை இடமாகவும், சதாசிவனைக் கடவுளாகவும் கொண்டு இரண்டு புவனங்களை உடையனவாயிருக்கின்றன.

இங்ஙனம் பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆகிய கடவுளர் ஐவரது அதிகாரத்துக்குட்பட்டிருக்கும் புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கும் எத்தனையோ கோடி அண்டங்களை உடையனவாயிருக்கின்றன.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன."

என்பது திருவாசகம். தமிழ் நூல்களில் கந்த புராணத்திலுள்ள அண்டகோசப் படலத்திலும் சிவஞானபோதமா பாடிய

முதலியவற்றிலும் அண்டங்களின் அளவை—அவற்றதியல்புகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

> " ஆதித் தத்துவ அத்துவா ஓதில்
> நீதில் அண்ட கடாகம் கோடி
> யோசனை கீழதன் உம்பர்ப் பேசிற்
> கால வனலுருத் திரர்வரை கோடி."

என்னும் ஞானமிர்தப் பகுதியால் கீழண்டச் சுவர்க்கம் கோடி யோசனை என்பதும், அதன்மேற் காலாக்கினி உருத்திர புவனம் கோடி யோசனை என்பதும் விளங்கும். காலாக்கினி உருத்திர புவனம் முதல் பத்திரகாளி புவனம் வரை நூற்றெட்டுப் புவனங்கள் பிரம்மாண்டத்திற்குட்பட்ட நிவிர்த்தி கலையிலிருப்பவை.

அமரேசபுவனம் முதல் சீகண்ட புவனம் வரை ஐம்பத்தாறு புவனங்கள் பிரதிஷ்டா கலையிலிருப்பவை. வாயு புவனம் முதல் அங்குட்ட மாத்திர புவனம் வரை இருபத்தேழு புவனங்கள் வித்தியா கலையிலிருப்பவை. வாம புவனம் முதல் சதாசிவ புவனம் வரை பதினேழு புவனங்கள் சாந்தி கலையிலிருப்பவை. நிவிர்த்தி புவனம் முதல் அநாசிருத புவனம் வரை பதினைந்து புவனங்கள் சாந்தியதீத கலையிலிருப்பவை. இப்புவனங்கள் அனைத்தும் முப்பத்தாறு தத்துவங்களுக்குட்பட்டனவாய்ப் பிரமன் முதல் சதாசிவன் வரையுள்ள ஐந்து கடவுளரின் ஆட்சிக்கடங்கினவாயிருக்க, இவற்றிற்கு மேலே முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து சிவபரம்பொருள் விளங்குகின்றனராதலால் இவ்வுண்மையைக் குறிக்க ஆசிரியர் திருமூலதேவ நாயனார் '**புவனங் கடந்து**' என்று இத்திருப்பாடலில் அருளிச் செய்திருக்கின்றார்.

ஆன்மாக்கள் பொருட்டாக ஆண்டவன் தோற்றுவித்த தத்துவங்களில் முதலிடம் பெற்றிருப்பது காலதத்துவம். இது சென்ற காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று மூன்று வகைப்பட்டு நிகழும். உயிர்களது தொழில்கள் அனைத்தும் இந்தக் காலதத்துவத்துக் குட்பட்டனவாகவே அமைந்திருக்கும். இறைவன் இக்கால தத்துவத்தைத் தோற்றுவிப்பதற்கு முன்னரே சிவ தத்துவங்கள் ஐந்தையும் தோன்றுமாறு செய்து அவற்றிற்கும் முற்பட்டவனாகி எழுந்தருளியிருப்பவன். எனவே மாயாகாரியமாகிய முதற்படைப்பு நிகழுவதற்கு முன்னமேயே, அம்மாயை முதலிய பாசங்களிலிருந்து இயல்பாகவே நீங்கிய பேரொளிப் பிழம்பாகச் சிவபரம்பொருள் திகழ்கின்றது என்பது உணரத்தக்கதாகும். இதனை "**அன்று**" என்னும் சேய்மைச் சுட்டுச் சொல்லால் ஆசிரியர் குறித்தருளினார்.

சிவபெருமானது சொரூப இலக்கணத்தை "அன்று புவனங்கடந்து" என்பதாலுணர்த்தித் தடத்த இலக்கணத்தை "பொன்னொளி மின்னும் தவனச் சடைமுடித் தாமரையானே" என்ற பகுதியால் அறிவுறுத்துகிறார். மக்களாகிய நம்முடைய கேசங்கள் கருமை நிறமுடையன. சிவபெருமானது சடைமுடி செந்நிறமுடையதும் பொன் போல ஒளிவிடும் பொலிவையுடையதுமாகும். தேவாரத் திருப்பதிகம் பெற்ற சோழநாட்டுத் திருத்தலமாகிய திருப்பனந்தாளில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவனது திருநாமம் "**செஞ்சடையப்பர்**" (அருணஜடேசர்) என வழங்குவது கொண்டு, பொன்னொளி மின்னும் சடையுடையான் சிவபெருமான் என்பது அறியத்தக்கதாகும். சூரியனுக்குத் "தவனன்" என ஒரு பெயருண்டு. செவ்வண்ணனாகிய சூரியன் ஒளியை வழங்கி, அறக்கருணையாகிய அநுக்கிரஹத்தையும், வெப்பத்தை வழங்கி மறக்கருணையாகிய நிக்கிரகத்தை

யும் புரிவது கண்கூடு. அதுபோலவே சிவபெருமானது சடைமுடி ஆரவாரத்துடன் வந்த கங்கையை அடக்கி வைத்து நிக்கிரக சக்தியையும், அடைக்கலமாக வந்த சந்திரனை நிறுத்தி வைத்து அநுக்கிரக சக்தியையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

" நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தானை" என்பது அப்பரடிகள் திருவாக்கு. செயற்கரிய இந்தச் செயல் சிவபெருமானது பேராற்றலுக்கும், திங்களைச் சடையிற் சூடிய மற்றொரு செயல் அவரது பெருங்கருணைக்கும் எடுத்துக் காட்டுகளாய் இலங்குவனவாகும். இறைவனுக்குரிய எட்டுக்குணங்களில் பேராற்றல், பெருங்கருணை ஆகிய இரண்டு குணங்களைச் சடைமுடிக்குச் சூரியனை உவமை காட்டும் முகத்தால் இங்கே ஆசிரியர் புலப்படுத்தியுள்ளாரென்பது அறியத்தக்கதாகும்.

சிவபெருமான் விருப்பத்தோடு வீற்றிருக்கின்ற இடங்களில் மெய்யடியார்களது உள்ளத் தாமரையும் ஒன்று.

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்பது திருமந்திரம்.

" நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்"

என்பது அப்பர் தேவாரம்.

" மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என்ற திருக்குறளில் "மலர்மிசை ஏகினான்" என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேருபவன்" என்று பொருள் எழுதுவார்.

முறைப்படி விசேட தீக்ஷை பெற்று விதிப்படி சிவபூஜை செய்து வருபவர்கள். அந்தரியாக பூஜையில் சிவபெருமானை இதய கமலத்தில் வைத்துப் பூசிப்பதும், புறப் பூசையில் "காட்டும்மேலாசனமேல் ஈசர் சதாசிவம்" என்னும் சிவஞான சித்தியாரின்படி, எட்டிதழ்த் தாமரையாசனத்தில் இறைவனது திருவுருவத்தை எழுந்தருளச் செய்து பூசிப்பதும், சிவபெருமான் கமலாசனர் என்பதைக் காட்டுவனவாகும். இதனையே "**தாமரையான்**" என்று ஆசிரியர் குறித்தருளினர்.

சிவபெருமானைத் தேவரில் ஒருவரெனவும், மூவரில் ஒருவரெனவும் எண்ணுபவர், வேதாகமங்களின் உண்மை முடிபை அறியாதவரே யாவர். 'ந;தத் சமஸ் சாப்யதிஸ்ச திருஸ்யதே' 'அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை' என்று சுவேதாசுவதர உபநிடதம் கூறுகின்றது,

" மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை" என்பது அப்பரடிகள் திருவாக்கு. ஆன்ம வர்க்கத்தில் வைத்தெண்ணப் பெறுகின்ற பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் பிரகிருதி மாயா புவன அளவில் தத்தம் தொழில்களைச் செய்யமாட்டுவாரேயன்றி, மேலேயுள்ள அசுத்த மாயாபுவனம், சுத்த மாயா புவனங்களில் தங்கள் அதிகாரங்களைச் செலுத்த வல்லுநராகார். சுத்த மாயா புவனம் வரை ஒடுக்கவும் உண்டாக்கவும் வல்ல பரமசிவனே. வேதாகமங்கள் உருத்திர நாமத்தால் துதித்துப் போற்றுகின்றன சம்புபட்ச உருத்திரனாகிய பரம்பொருளுக்கும், அணுபட்ச உருத்திரர்களாகிய ஆன்மாக்களுக்கும் வேறுபாடு காணும் மதுகையில்லாத மற்றைச் சமயவாதிகள் அணுபட்ச உருத்திரனையே சம்புபட்ச உருத்திரனென மயங்கிக் கூறுவர். "ய ஏகோ ருத்ர உச்யதே" என்னுந் தைத்திரீய ஆரணியக உபநிடதம் ," எவர் ஏகரோ அவர் உருத்திரர் எனப்படுபவர்" என்று கூறுகின்றது.

பெயரொற்றுமை ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு கடவுளையும் ஆன்மாவையும் ஒன்றென்று கூறுவார் கூற்றையறிந்து அவர்பால் இரங்கி

"மூவரென் றேயெம் பிரானொடு
எண்ணிவிண் ணாண்டு மண்மேல்
தேவரென் றேயிறு மாந்தென்ன
பாவந் திரிதவரே"

என்று மணிவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்வாராயினர்.

ஆன்ம போதம் கொண்டு தேடிக் கண்டுபிடிப்பதற்கு எட்டாது நிற்பவர் சிவபெருமான், சிவபோதங்கழன்று சிவ போத வயமாய் நின்ற அப்பரடிகளை ஒத்த மெய்ஞ் ஞானியரே அவரைத் "தேடிக் கண்டு கொண்டேன்." என்று துணிந்து சொல்ல வல்லவராவர். ஆன்மாக்களாகிய நம்மையே தேடியறிய முடியாத நம்போலியர் அவ்வான்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாய் இலங்கும் ஆண்டவனைத் தேடியறிதல் எவ்வாறு கூடும்? ஒருபோதும் கூடாது. சிவத்தைத் தேடியறியும் திருவருள் ஞானம் பெற்றவர்கள், அச்சிவம், "மும்மூர்த்திகளிலொருவனல்லன் அவர்க்கும் முதல்வன்" என்ற உண்மையை உணர்வார்கள். தேடுதற்குரிய தகுதியைப் பெற்ற அவர்கள் தாமும், ஒப்புடையனல்லா ஒருவனாகிய சிவபெருமானொடொத்த தெய்வத்தை நாம் வாழுகின்ற இப்பிரகிருதி புவனத்திலும் ஏனைய புவனங்களிலும் சென்று தேடினாலும் காணும் முடிபு "அவனோடொப்பார் யாவரும் இல்லை" என்பதேயாகும்

இவ்வுண்மை ஆசிரியர் திருமூலதேவநாயனாரது திருவாக்கில் 'சிவனொடொக்கும் தெய்வம் தேடினுமில்லை, அவனொடொப் பாரிங்கு யாவருமில்லை" என்ற வரிகளில் தெளிவுறுத்தப் பெற்றுள்ளது.*

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| திருக்கோளிலி : திருக்குண்டையூர் : திருவாரூர் : | நெல் மகோற்சவம். |
| இராமேசுவரம் : | மகாசிவராத்திரி விழா. |
| ஸ்ரீ பண்ணாரி : | மாரியம்மன்கோயில், பங்குனிப் பெருவிழா. |
| காஞ்சிபுரம் : | திருவேகம்பநாதர் கோயில் ,, |
| கோயமுத்தூர் : | கோனியம்மன் பிரம்மோற்சவம். |
| திருவன்பார்த்தான் : | பனங்காட்டூர் ,, |
| இராதாபுரம் : | வரகுணபாண்டியேசுவரர் மகாகும்பாபிஷேகம் |
| மதுரை : | தல்லாகுளம் சக்தி விநாயகர் ,, |
| திருவாதவூர் : | சங்காபிஷேகம் |
| திருவெண்காடு : | இந்திரமகோற்சவம், |
| திருச்சாட்டியக்குடி : | மாசிமக விழா. |
| காங்கேயநல்லூர் : | இலட்சதீப விழா. |

சென்னை ஏகாம்பரேசுவரர் கோயில் பிரம்மோற்சவம் இலட்சதீப விழா.

சென்னை கந்தசுவாமி கோயில் பிரம்மோற்சவம்.

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

## (சப்பாணிப் பருவம்)

*சுண்ணம் தெளித்தன்ன வண்ணப் பொலந்தாது
தூற்றுபூம் பொழிலின் நாப்பண்*

*சுடரொளி துளும்புகண் ணாடிகள் பதித்தொளிர்
சோபான வகை அமைந்து*

*விண்ணந் துளைத்தேகு வெற்பென்ன ஓங்கிமிளிர்
வெண்சுதைய மாளிகை தொறும்*

*விரிசுடர்த் தரளமொடு பன்மணிக் கோவைதிகழ்
மேற்றலம் இருந்து மடவார்*

*பண்ணென்று யாழினொடு தண்ணுமை முழங்கிடப்
பரிபுரம் தலிமி ழற்றப்*

*பைந்தளிர்ச் சீறடி பெயர்த்துமா மயிலெனப்
பாடியாடிக் களிக்கும்*

*தண்ணம் புனற்பொன்னி வளநாடு தந்தவன்
சப்பாணி கொட்டியருளே*

*தவ ஞான நெறிதந்த சிவஞான மழகளிறு
சப்பாணி கொட்டியருளே.* (1)

*காதளவும் ஓடிமீன் மழைமதர் நெடுங்கணார்
கதிர்மதிக் கிரணம் சூழ்கும்*

*கவினாரும் அரமியத் தலமீது அமர்ந்துதம்
காரளக பந்தியூட்டும்*

*தீதறும் மணப்புகைப் படலமொடு வாவென்று
தேவரீட்டம் தனைக் கூஉய்ச்*

*செந்தீ வளர்க்கும்மறை அந்தணர்கள் இம்மையே
சிந்தியா அவிசொரிந்து*

*வேதநெறி யிற்பரவு வேள்விதழை ஆகுதி
விழுப்புகை நறும்படலமும்*

*விரைகமழ முதிர்கழைச் சாறரும் புகையோடு
விண்ணுறீஇத் தண்ணிழல் செயத்*

*தாதுமலி சோலைசூழ் காழிநன் னகராளி
சப்பாணி கொட்டியருளே*

*தவஞான நெறிதந்த சிவஞான மழகளிறு
சப்பாணி கொட்டியருளே.* (2)

தெய்வமறை தானே தழைத்ததெனை ஓதியும்
சீலமார் நோன்பிருந்தும்

செய்வினைகள் தாமே பயன் தரூஉம் ஆதலால்
தெய்வம் வேண்டா ஈங்கெனை

மையலார் நெறிநின்ற மாமுனிவர் கூட்டமும்
மறைமுடி வெனப் போற்றிசெய்

மாண்புறூஉம் உபநிடத அத்துவித வார்த்தையின்
மரபொரீஇப் பொருள் கோடலான்

துய்யமறை தேடரிய பிரமமே நானெனும்
தொழுத்தையர் குழாமும் எல்லாம்,

தொன்மறையின் உண்மையுணர் இன்னருளிலாரெனச்
சொற்றனை பதிகந்தொறும்

தையலர் தமைப்போற்றும் மெய்யருட் சிவஞானி
சப்பாணி கொட்டியருளே!

தவஞான நெறிதந்த சிவஞான மழகளிறு
சப்பாணி கொட்டியருளே. (3)

இமிழ்திரைய ஞாலத்தில் உமிழொளிக் கலன் மாதர்
இன்பத்தை நீத்தவர்க்கே

இன்னதென அறியாத முத்தியுண் டெனவோதும்
ஏழைமதி வல்லமணர்கள்,

அமரரொடு முனிவரும் பரவுமிறை யருள்தன்னை
அவமதித்து அறமுரைப் போர்

அழலெரியில் ஏடிட்டது, எதை நம்பி அறிவிலோம்
ஆரிருட் கங்குல் தன்னில்

திமிர மலமென வந்து தீக்கொளுவ அவ்வழல்
தென்னவனை மூழ்க நோக்கித்

தேவிமனம் மகிழ அவன் ஆவிகாத் தருளிவெண்
திருநீற்றின் ஆற்றல் தேற்றித்

தமிழ் வழுதி மாமேனி தீண்டிய மலர்க்கைகொடு
சப்பாணி கொட்டியருளே

தவஞான நெறிதந்த சிவஞான மழகளிறு
சப்பாணி கொட்டியருளே. (4)

மண்பரவு வளவர்கோன் பாவையார் எனவந்த
பாண்டிமா தேவியாரும்

மாதவம் பணியுமன் மந்திரி குலச்சிறையும்
மன்னவனை உய்யக்கொள,

விண்பரவ மண்பரவ மூவாண்டெனும் பொழுதில்
மேயசிவ ஞானமுண்ட

வீறுடைக் குரிசில் நீ திருவுள்ளம் ஆகெனவும்
விமலனரு ளாதல் உன்னிப்

பண்பரவு செந்தமிழ்ப் பாண்டிநா டெய்தியப்
பார்மன் னனுக் கருளும்நாள்

பண்பிலாச் சமணர் கண்காணச் செந்தமிழ்ப்
பாசுரம் வரைந்து வைகைத்

தண்புனலில் எதிரேற விட்டதொர் தடக்கை கொடு
சப்பாணி கொட்டி யருளே

தவஞான நெறிதந்த சிவஞான மழகளிறு
சப்பாணி கொட்டியருளே. (5)

கடியுடை வியனூர்க் கொல்லியர் மழவன்
கன்னி இளந்தளிர்தான்

கனலெரி வாய்ப்பட் டெனமுய லகனால்
கண்வழி ஆவிஉகத்

துடியிடை மடவாள் தனை அருளித்தமை
"துணிவளர் திங்களெ"னும்

தொடைமலி தமிழால் அவளுறு துயர்தீர்த்
தருளினை, அஃதொன்றோ?

விடமணி மிடறெம் பெருமான் அமரும்
விரிநீர் மருகலுறீஇ

விரிகுழ லாளுயிர் வாழ்வு கனிந்திட
வேதத் தமிழ் வாயால்

கொடுவிடம் மாற்றிய பேரரு ளாளன்
கொட்டுக சப்பாணி

கோளுறு தீவினை மாற்றிய குழகன்
கொட்டுக சப்பாணி. (6)

விரைகமழ் மென்பூங் கமலத் தாரணி
வேதியர் மாமணியாய்

வேதமு தற்பொருள் யாவும்வி ரித்தரோர்
வித்தக மாமுனியே

பரையருள் ஞானப் பாலமு தொழுகும்
பவளச் செவ்வாயா

பகவதி யம்மை யிழைத்த தவந்தரப்
பார்மிசை வந்தவனே

கரைபொரு திரைசேர் சுரிவளை முத்தம்
கான்றிட நெட்டிதழார்

கைதைம டற்பொதி சோறு வழங்கிடு
காட்சி மரீஇ அழகார்

குரைகடல் சூழ்தரு காழித் தலைவன்
கொட்டுக சப்பாணி

கோளுறு தீவினை மாற்றிய குழகன்
கொட்டுக சப்பாணி (7)

பொடியணி தொண்டர்கு ழாம்புடை செல்லப்
புண்ணிய வான்படை போல்

போனக ஞானம் உமைதர உண்டெழு
போரே றே அந்நாள்

படியணி சைவத் திருநெறி யோங்கப்
பைந்தமிழ் நாடுற்றாய்!

பரநா தத்தொனி வளர்தா ளம்பெறு
பரம தயா நிதியே!

செடியணி பிறவித் துன்பமொ ழித்தருள்
தெய்வசி காமணியாய்த்

திகழொளி முத்தின் சிவிகை நடத்திய
செல்வக் குமரோனே!

கொடியணி மாடப் புகலியர் தவமே
கொட்டுக சப்பாணி

கோளுறு தீவினை மாற்றிய குழகன்
கொட்டுக சப்பாணி. (8)



ஸ்ரீ இராமானுஜர்—ஸ்ரீபெரும்பூதூர்



ஸ்ரீ நம்மாழ்வார்

—(312 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருமறை முடிபினை எளிதில் வடித்த முதற்றேவே
அடியவ ருள்ளமெனும் வரியளி மொய்த்த மலர்க்காவே

திருமுறை வரிசையில் மும்முறை செப்பிய வைப்பே நல்
திருவுள மழகிய கருணை கொழித்த பெருக்காறே

பருமுலை மலைமக ளமுது கொழித்த இதழ்த்தேனே
பகவதி மனமகிழ் தழைய உதித்ததொர் புத்தேளே

கருமுறை நெறிதவிர் புகலியன் கொட்டுக சப்பாணி
கலைமலி தமிழ்தரு கவுணியன் கொட்டுக சப்பாணி. (9)

விழைவற வெகுளியும் ஒழியநி னற்றுள் பற்றுக
விரிமன மயலொடு வினைவலி கெட்டே விட்டோட


அழிவு செய் வினைவல புலனைவி டுத்தே யப் பாலாய்
அமைவுறு கரணமும் வளியும் அடக்கியொ டுக்காநின்

றெழுதரு பரமசு கக்கட லெற்கே பற்றுமா
றிசையளி சூழுன முளரிப தத்தைமி திப்பாயே

கழைதவழ் பொழில்மலி கவுணியன் கொட்டுக சப்பாணி
கலைமலி தமிழ்தரு கவுணியன் கொட்டுக சப்பாணி. (10)



பல்லவர்காலத்துச் சிற்பக்கலைத்
திறனுக்குப் புகழ்மிகப்பெற்ற
காஞ்சிபுரம் ஸ்ரீ கைலாசநாதர் கோயில்
—இராஜசிம்மன் : (கி.பி. 680-700)



பல்லவர்காலத்துச் சிற்பக்கலைத்
திறனுக்குப் புகழ்மிகப்பெற்ற
காஞ்சிபுரம் ஸ்ரீ கைலாசநாதர் கோயில்
—இராஜசிம்மன் : (கி.பி. 680-700)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras 34, Printed at Manorama Press 39, M. J B. St, Madras-5.